# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை





12-10-69 அன்று காஞ்சிபுரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் தலைமையில் வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு கே. ஏ. மதியழகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட செங்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமை அலுவலகக் கட்டிடம்.

## கேட்டீரா சேதி!

## என்னதான் நடக்கும், நடக்கட்டுமே!

எப்படியோ ஒரு விதமாக தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவராக திரு. கக்கன் அவர்களை நியமித்துவிட்டிருக்கிறார் காமராசர். சாம, பேத தான, தண்ட வகைகள் அனைத்தும் தாராளமான அளவுக்குக் கையாளப்பட்டு ஒரு மனதானத் தேர்வு என்ற மகுட்முஞ் சூட்டிவிடப்பட்டுவிட்டிருக்கிறது. முக்கியமான சூழ்நிலையில் முக்கியமான சில குற்றச்சாட்டுக்களோடு தரப்பட்ட சுப்பிரமணியனாரின் விலகலைப் பற்றி வாதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டும், சுப்பிரமணியம் தம்முடைய நிலைபற்றிவிளக்கசந்தர்ப்பம் அளிக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டும் எதுவுமேநிகழாத தன்மையில் "ஒருமனதான" தேர்வுநடைபெற்றுவிட்டதாம். குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒரு அரிஜன வேட்பாளருக்கு ஆதரவு தரவிரும்பாதவர், த. நா. கா. க. தலைவராக ஒரு தாழ்த்தப்பட்ட இனத் தலைவரைக் கொண்டு வந்திருப்பது தீவிரமான சிந்தனைக்குரியதாகும். புதிய தலைமையும், அந்தத் தலைமையின் தலைவரும் பிரதான இந்திரா எதிர்ப்பாளர்கள். இந்திராவுக் கெதிரான ஒரு புதிய இயக்கம் காணப்போவதாகவும் தலைவரின் தலைவர் சங்கநாதம் புரிந்திருக்கிறார். இந்திரா எதிர்ப்பு நடக்கும் என்பதைவிட, தமிழக அரசியலில் அமைதி கெடும்படியான நடவடிக்கைகளை இனி மேற்கொள்வர் என்பது புரிகிறது. இபபோது காமராசருக்கு, காங்கிரசுக் கட்சியைவிட இந்திரா அம்மையாரின் இதயத்தில் ஒரு சலசலப்பையுண்டாக்குவது பெரியகாரியமாகிவிட்டிருக்கிறது. இந்த காரியத்தில் ஒன்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பலியாக வேண்டும்; இன்றேல் காமராசர் பலியாகவேண்டும். எதுநடக்கும் என்பது விரைவிலேயே தெரியக்கூடும்.

## காங்கிரஸ் முதலில் ஒழியட்டும்!

"நாடு—காங்கிரசுக்கு முன்னும், பின்னும்" என்பது பற்றிய சுவையான வாதத்தை உலவ விட்டுக்கொண்டிருக்கிறது காங்கிரசுக்கட்சி, இந்தக் கட்சியின் தமிழகத் தலைவராகக் கூடும் என்று நம்பிக்கொண்டிருந்த சம்பத் என்பவர், கிருஷ்ண மேனன் எடுத்துக்காட்டியஒரு பிரச்னைக்குப் பதில் சொல்லும் வகையில் எதையோ உளறிக் கொட்டியிருக்கிறார். காங்கிரசுக்காரர்கள் இப்போதெல்லாம் காங்கிரஸ் இல்லையென்றால், நாடே இல்லை என்கிற ரீதியில் பேசத் தொடங்கி இருக்கிறார்கள். இதற்குப் பதில் சொல்லும் வகையில் வி. கே. கே. மேனன், காங்கிரசுக்கு முன்னும் நாடு இருந்துகொண்டுதான் இருந்தது; பின்னும் இருக்கத்தான் போகிறது என்ற பொருளில் பேசினார். இந்தப் பேச்சுக்குப் பதில் சொல்வது என்ற முறையில், காங்கிரசுக்கு முன்பு நாடு அடிமையா யிருந்தது என்றும் பின்பு, மீண்டும் அடிமைப்படும் என்றும் கருத்தறிவித்திருக்கிறார். வரலாறுகளை, ஒரு நேரத்தில் துருவித் துருவி ஆராய்ந்துகொண்டிருந்த சம்பத் என்பவரா இப்படிச் சொல்கிறார் என்ற ஐயம்கூட நமக்கு ஏற்படுகிறது—நாடு அடிமையானது 225 ஆண்டுகளுக்கு முன்புதான். அப்போது காங்கிரஸ் 'கரு'வாகக்கூடவில்லை. அடிமையாகு முன்பு மாமன்னர்கள் வீரத்தாலும், விவேகத்தாலும் பாராண்ட பண்டைப் பெருமைகளைப் பெற்றபோது காங்கிரஸ் இல்லை. நாடு இருந்துகொண்டுதான் இருந்தது; வளத்தோடும் இருந்தது. பெருமழை பெய்யும்காரணத்தால் சாலைப் பாதைகள் பழுதுபடுமானால், அதனை விளைந்து முற்றி நிற்கும் கரும்புகளைக்கொண்டு டுச்செப்பனிடும் அளவுக்கு வளங் கொழித்துக் கொண்டுதானிருந்தது. நாடு அடிமையான பின், துணைக் கண்டம் முன்னர் கண்டிராத பல புதிய மாறுபாடுகளைக் காணத்தான் செய்தது. என்றாலும் அடிமை நிலையை ஏற்க முடியாதென்பதாலேயே அது எதிர்க்கப்பட்டது. புதுமைகள் எதுவும் எதிர்க்கப்படவில்லை, எனவே, எதிர்காலத்தில் காங்கிரசுக் கட்சி பூண்டோடு அழிக்கப்பட்டுப் போனாலும் நாடு நலம் பெற்று, வளம் பெற்றுத்தான் இருக்கும், காங்கிரசுக் கட்சியோடுதான் நாட்டின் சுதந்திரமும், நல்வாழ்வும் பிணைக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்படுமானால் அது அசல் சர்வாதிகாரப் போக்காகும். இப்போது தெரிவதெல்லாம் காங்கிரசுக் கட்சியினால்தான் நாடு கெட்டுப் போய்க் கொண்டிருக்கிறது என்பது தான். காங்கிரஸ் தொலைந்தொழிந்து போனால்தான் முழுச் சுதந்திரத்தையும் மக்கள் பெற்றுத் துய்க்க முடியும். ஏழை, எளியவர்களும் வாழ்வைப் பெற முடியும். சுதந்திரத்தின் பேரால் மட்டும் இனியும் மக்களை ஏய்க்க சம்பத் போன்றவர்கள் நினைத்தால் அது நடவாது!

★

## தமிழின்பம்

குறுநகை புரியும் மாதர்
கொடியிடை தழுவ லின்பம்
அறுசுவை யுண்டி யுண்ணல்
அரும்பசி யாளர்க் கின்பம்;
உறுபகை சாடல் வீரம்
உந்திடு முளத்திற் கின்பம்;
நறுமணம் வீசும் செந்தேன்
நற்றமி ழதனி னின்பம்!

தண்டலை சேர்ந்த புள்ளும்,
தாமரை மொட்டும் வானில்
ஒண்கதிர் தோன்றுங் காலை
உவகையாற் கொள்ளு மின்பம்;
கண்கவ ரியற்கைக் காட்சி
களிபெறு கலைஞர்க் கின்பம்;
பண்ணிசை யெழுப்பும் வண்டு
பைந்தமி ழினிமைக் கின்பம்!

கருமுகில் திரண்டு வானில்
காற்றுட னுலவும் போது
பெருமகிழ் வுற்றுத் தோகை
பீலியை விரித்த லின்பம்;
வருகிற வேனில் கண்டு
சுருதியைக் கூட்டிப் பாடல்
தருவது குயிலிற் கின்பம்;
தண்டமிழ்தா னெங்கட் கின்பம்!

நிலவினைக் காண லல்லி
நெஞ்சினுக் கின்பம்; தேனை
மலரினி லுண்ணல் வண்டு
மயங்கிட லின்பம்; நாளும்
குலவிடும் குழவி, பெற்றோர்
கொஞ்சிட லின்பம்; ஆனால்
புலவரி னுள்ளத் திற்கோ
பொற்புடைத் தமிழ்தா னின்பம்!

கொடிகளின் மேனி தொட்டுக்
கொஞ்சுதல் தென்றற் கின்பம்;
படிகிற முகில்கள் தம்மைப்
பற்றுதல் வெற்பிற் கின்பம்;
மடிதவழ் மதலை யென்ன
மண்ணக நதிகட் கின்பம்;
கடிகமழ் தமிழே இந்தக்
காசினிக் கெல்லா மின்பம்!

—கந்ததாசன்

# காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 19—10—69 | இதழ் 14


# அப்போதும் தெளியுமோ என்னமோ?

"திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிச்சரியான முறையில் கணிக்கத் தெரியாமல், அதனைப்பற்றித் தப்புக் கணக்குப் போட்டுக் கொண்டே வந்ததாலும், கழக எதிர்ப்பில் முழு மூச்சாக ஈடுபட்டு வந்ததாலுமே, காங்கிரஸ் 1967-ல் தன் ஆட்சிப் பொறுப்பை இழந்தது. இப்போதும் காங்கிரஸ் கழகத்தைத் தூற்றுவதனையே முக்கிய வேலையாய்க் கொண்டிருக்கிறது. இன்னும் என்னை எங்கே கொண்டுபோய் வைக்க வேண்டுமென்பதற்காக இப்படித் தூற்றிக்கொண்டிருக்கிறார்கள்?"

—என்று பேரறிஞர் அண்ணா அவர்கள், இரண்டாண்டுகளுக்கு முன்பு, ஒரு பொதுக்கூட்டத்தின் மூலம் கேட்டார்கள்.

காமராசருக்கும் சரி, அவரது தொண்டரடிப்பொடிகளுக்கும் சரி, இந்தப் பேச்சும், இதன் பொருளும் அப்போது மட்டுமல்ல, இப்போதுகூட புரிந்ததாகத் தெரியவில்லை.

கழகத்தைப் பற்றியும், அதன் தலைவர்களைப் பற்றியும், ஆட்சியைப் பற்றியும் அலங்கோலமான முறையிலும் உண்மைக்கு மாறான வகையிலும், மனம் போன போக்கிலும் பேசுவதையே அன்றாட நடவடிக்கையாய்க் கொண்டுவிட்ட காமராசரைப் பற்றி நினைக்கிறபோது நமக்கு வேதனைக்குப் பதில், விசாரத்திற்குப் பதில், பரிதாப உணர்ச்சிதான் மேலோங்கிக் கொண்டிருக்கிறது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல, கழகத்தின்மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட காங்கிரசின் போக்கினால்தான் இருந்த ஆட்சியை இழக்க நேரிட்டது என்பதை இன்றுவரையில் காமராசர் உணர்ந்து கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. மேலும் மேலும் தூற்றல் பாணங்களைத் தொடர்ந்துகொண்டே வருகிறார். செல்லுமிடங்கள் தோறும் கழக எதிர்ப்புணர்ச்சியை, பகையுணர்ச்சியாகவே பாவித்துக் காட்டத் தொடங்கிவிட்டிருக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாள் முதல், அது அரசுக் கட்டிலேறி, அருஞ்சாதனைகள் சிலவற்றைச் சாதித்துக் காட்டியது வரையிலே கண்கொண்டு நேர்முகமாகவே கண்டு கொண்டிருக்கும் காமராசர், இதுவரையில் கழகத்தைப் பற்றியோ, அதன் நடவடிக்கைகள் பற்றியோ ஒருநாள்கூட, ஒருவார்த்தை கூடப் பாராட்டிப் பேசி அறியமாட்டார்.

கழகம் ஒரு கட்சியே அல்ல

—என்ற நாட்கள் உண்டு.

நேற்று பெய்த மழையில் இன்று விளைந்த காளான்

—என்று விமர்சித்த காலமும் உண்டு.

கட்டை விரலை வெட்டி விடுவேன்

—என்ற அச்சுறுத்திய வேளையும் இருந்தது.

ஆழக் குழிதோண்டி புதைக்கப்பட்டு விடும்

—என்று ஆருடம்கூட கணித்திருக்கிறார்.

இவ்வளவுக்குப் பிறகும் கழகம் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேரோடி, நாளும் நாளும் வளர்ந்து, பல லட்சக் கணக்கான உறுப்பினர்களைக் கொண்டு பல்லாயிரக் கணக்கான கிளைக் கழகங்களையும் பெற்று, 45 க்கு மேற்பட்ட நகராட்சிகளையும் ஏற்றுக்கொண்டு, இரண்டு மாநிலங்களின் ஆட்சியும் ஒப்படைக்கப் பெற்றுவிட்டிருக்கிறதென்றால் — இன்று வரையில் காமராசரின் கணிப்பு, தவறானதாகவே இருந்து கொண்டிருக்கிறது என்பதை, இன்னமும் காமராசரே புரிந்துகொள்ளாதவராக இருக்கிறார் என்பதெண்ணி, பரிதாபப்படத்தான் வேண்டியிருக்கிறது.

தன்னை உணர்ந்துகொள்ள முடியாவிட்டாலும் கேடொன்றும் ஏற்பட்டுவிடப்போவதில்லை. ஆனால் நாட்டையும், அதன் சூழ்நிலைகளையும் உணர்ந்து கொள்ளாமல், உணர்ந்து கொள்ளும் ஆற்றல் இல்லாமல், நாட்டு அரசியல் பற்றி விமர்சிக்க வந்துவிடும் போக்கு பேரபாயத்தை உண்டாக்கக் கூடியதாகும், விமர்ச்சிப்பவருக்கும், நாட்டுக்கும். அதுவும் காமராசர் தலைவர் என்ற தகுதியுடன் இருக்க விரும்பிச் செயல்படும் சூழ்நிலையில் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியைப்பற்றி அவர் எப்படியும் விமர்சிக்க உரிமைப்படைத்தவர், அவர் ஒரு காங்கிரசுக்காரர் என்ற முறையில்; இந்திரா ஒரு காங்கிரஸ் தலைமை அமைச்சர் என்ற வகையில். ஆனால் கழகம்பற்றி விமர்சிக்க வரும்போது முன்னெச்சரிக்கையும், சுய சிந்தனையும், தெளிந்த ஞானமும் இல்லாது போகுமானால், அதன் விளைவுகளை அனுபவிக்கவேண்டியது காமராசரும், தமிழ்நாடு காங்கிரசுக் கட்சியுமேயாகும்.

கழகம் ஒரு கட்சியே அல்ல—என்ற நிலையிலிருந்து இப்போது—

கழகம் ஒரு அரசியல் கட்சியே அல்ல

என்று திருவாய் மலர்ந்திருக்கிறார் காமராசர். முன்னாட்களில் செய்த பூசனைகள் மூலம் இரு மாநிலத்து ஆட்சியையே தந்த காமராசர், இப்போதைய புதிய பூசனையின் மூலம் எதனைப் பெற்றுக்கொடுக்கப்போகிறார் என்பது கழகத்தவரின் தீவிர சிந்தனைக்குரியதாகும்.

அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில், ஊராட்சித் தேர்தல்கள் நடைபெற விருப்பதை முன்னிட்டு, கழகத்திற்குத் தந்த விருந்து என்றே கழகத்தவர் இதனை மதிப்பிட்டுக்கொண்டால், நல்ல பலனை அறுவடைசெய்து கொள்ளமுடியும். குப்பை, கூளம், எதுவுமற்றபடி தமிழ் நாட்டில் காங்கிரஸ் துடைத்தெறியப்பட இது ஒரு நல்ல சந்தர்ப்பம்.

—ஆணவத்தின் சிகரத்தில் அமர்ந்து அரசியல் கழைக் கூத்தாடிக்கொண்டிருக்கும் காமராசருக்கு அப்போதாவது தெளிவு பிறக்குமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

# நீங்களே நினைத்துப் பாருங்கள்!

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து நாற்பத்தேழாம் ஆண்டு ஆகஸ்ட்டுத் திங்கள் பதினைன்காம் நாள் இரவு பனிரெண்டு மணிக்கு மௌன்பேட்டன் பிரபு பண்டித ஜவகர்லால் நேருவிடம் இந்தியப் பெருங்கண்டத்தின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்ததிலிருந்து இன்றுவரை அனைத்திந்திய காங்கிரஸ் இந்த நாட்டைக் கோலோச்சி வருகிறது.

பாராட்டத் தகுந்த சில முன்னேற்றங்கள் நாட்டில் நடைபெற்றிருக்கின்றன. என்ருலும் நாட்டில் இன்னும் பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் எதுவும் குறைந்துவிட்டதாகத் துணிந்து செல்லமுடியவில்லை நாளுக்கு நாள் நடுத்தரக் குடும்பங்களின் வாழ்க்கை சீர்குலைந்துகொண்டே வருகிறது. படித்தவரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் அச்சத்தையும் எதிர்காலத்தில் நம்பிக்கையின்மையையும் உருவாக்கி வருகிறது. உலகுக்கெல்லாம் அமைதியைப் போதித்த புத்தரும் காந்திமகானும் அவதரித்த மண்தான் எனினும் வகுப்புவாத வெறி மதப்பூசல்—சாதிக் காய்ச்சல்—தீண்டாமைக் காழ்ப்பு ஆகிய எவையும் ஒழிந்துவிட்டதாகக் கருத முடியவில்லை.

பொருளாதாரத் துறையில் கண்டிருக்க வேண்டிய முன்னேற்றத்தைக் காண இயலவில்லை.

சமுதாயத்தில் மக்களிடம் சகிப்புத்தன்மை உருவாகவில்லை—உருவாக்கப்படவில்லை.

ஜனநாயக முறையாவது தழைத்துச் செழிக்கிறதா என்கிற கேள்விக்கும் சடுதியில் நல்ல பதில் சொல்லும் வகையில்லை!

"இந்த நிலையில் நாடாளும் காங்கிரஸ் கட்சி நடந்து கொள்ள வேண்டிய பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொள்கிறதா—" சர்வ சாதாரண அறிவு படைத்த பாமரமகன் இந்தக் கேள்வியைக் கேட்பதாக வைத்துக்கொள்வோம். இந்த நாட்டின் பாமர மகன் கேட்கும் இந்தக் கேள்விக்கு பாரதத்தை ஆளச் சொல்லி வாக்களித்த பாமர மகன் கேட்கும் இந்தக் கேள்விக்கு அரசியல் அரிச்சுவடி தெரியாத சாதாரண குடிமகன் கேட்கும் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல எந்த காங்கிரஸ் தலைவராவது முன் வருவாரா?

"என்னையா இது நாட்டில் மக்கள் தொகை வளர்ச்சியைத் தவிர வேறெந்த வளர்ச்சியையும் காண முடியவில்லை. உலகில் உள்ள சின்னஞ்சிறு நாடுகளிடமிருந்தெல்லாம் கோடி கோடியாகக் கடன் பட்டிருக்கிறதாகவேறு சொல்கிறீர்கள். சோசலிஷசமுதாயம் அமைத்துவிட்டுத்தான் மறுகாரியம் என்கிறீர்கள். காங்கிரஸ் கட்சிதான் இந்தியாவைத் தாங்கிக் கொண்டிருக்கிறது என்கிறீர்கள். காங்கிரஸ் போய்விட்டால் இந்தியாவே போய்விடும் என்கிறீர்கள். அப்படிப்பட்ட காங்கிரசில் ஏனையா இப்படியெல்லாம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அசம்பாவிதங்கள் நடந்தபடி இருக்கின்றன காங்கிரஸ்காரர்கள் எல்லோருமே தியாக பரம்பரையில் உதித்த உத்தமர்களாயிற்றே — உங்களுக்குள்ளே என்னையா தகராறு? யாராவது? ஒருவர் பொறுத்துப் போகக் கூடாதா?"

—என்று மிக எளிய பாமரன் கேட்கும் கேள்வி பெருந்தலைவர் முதல் சிறு தொண்டர் வரையில் காங்கிரசில் உள்ள எவருடைய காதிலும் விழுந்ததாகத் தெரியவில்லை.

பிழைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணமிருந்தால் இப்போதே விழித்துக்கொள்ளுங்கள்.

நீங்களே அடிக்கடி ஒருவர்மாற்றி ஒருவர் சொல்லிவந்திருக்கிறீர்கள்; "விரைவாக சமுதாயத்திலே உள்ள ஏழ்மை தொலையவேண்டும் வறுமை நீங்கவேண்டும். ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் நீக்கவேண்டும்" என்று நீங்கள் இக்கருத்தினைச் சொல்லும் போதெல்லாம், 'இவர்களிடம் தானே பொறுப்பு இருக்கிறது. இவர்கள்தானே எங்களைத் தவிர இந்தியாவை 'ரட்சிக்க' வந்தவர்கள் எவருமில்லை; எங்களால் முடியாதது எதுவும் இல்லை என்று சொன்னவர்கள். இப்போது இப்படிச் சொல்லத் தொடங்கியிருக்கிருர்களே"—என்று பாமரமக்கள் எண்ணமிடுகின்றனர்.

"விரைவாக சோஷலிச சமுதாயம் அமையவேண்டும்; இல்லை யேல் புரட்சி ஏற்படும்" — என்றும் பெருந்தலைவர்கள் எச்சரிக்கின்றனர்.

"ஆமாம்; இப்படி இவர்கள் யாரை எச்சரிக்கிருர்கள்?"—இதுவும் ஏதுமறியாத பாமரனின் கேள்விதான்!

"கோலோச்சும் பொறுப்போ உங்களிடமிருக்கிறது. உங்களை நம்பித்தான் ஆட்சிப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்தோம். "எங்கள் ஏழ்மையைப் போக்குவீர்கள், வறுமையை விரட்டுவீர்கள்! பசியையும் பிணியையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் தொலைப்பீர்கள்! செல்வம் ஓரிடத்தில் குவியாமல் பாதுகாப்பீர்கள்! ஏழை எளிய மக்களுக்கு நல்வாழ்வை நல்குவீர்கள்"—என்று நம்பித்தானையா உங்களிடம் இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிருேம், கடந்த இருபது இருபத்திரண்டு ஆண்டுக்காலமாக! எனக்கு இல்லாவிட்டாலும்—என் காலத்தில் இல்லாவிட்டாலும், என்னுடைய மகன் காலத்திலாவது—பேரன் காலத்திலாவது எங்கள் ஒட்டிய வயிறும்—உலர்ந்த பரட்டைத் தலையும்—கிழிந்த கந்தலும் பொத்தல் குடிசையும் விலகி வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளாவது தீரும் என்று நம்பித்தானையா நாட்டாட்சியை உங்களிடம் தந்தோம். இப்போது உள்களுக்குள்ளேயே உயர்வுதாழ்வும் சண்டை சச்சரவும் பண்ணிக்கொண்டு, "புரட்சி வரும்" என்று பயமுறுத்துகிறீர்களே—யாரை?"

இந்தக் கேள்வி இன்றைக்கு ஏழை பாமரனின் உள்ளத்தில் எழுந்திருக்கிறது.

வீழ்ந்துவிட்ட ஜெர்மனி எழுந்து நிற்கும் வரலாறும், குண்டடிபட்ட ஜப்பான் செழித்துவரும் சரித்திரமும் ஜாரின் பிடியிலிருந்து விடுபட்ட சோவியத்தின் வளர்ச்சியும் உலகின் வேறுபிற நாடுகளின் முன்னேற்றமும் பற்றிக் கேள்விப்பட்டுகூட அறியாத ஏழை எளியவர்கள் காங்கிரசில் நடைபெறும் குத்து வெட்டு. குழிபறிப்பு. பழிவாங்கல். பலம்பார்த்தல் ஆகிய அல்லோலகல்லோலங்களைக் கண்டால் என்ன நினைப்பார்கள்?

"இதுதாஞ காங்கிரஸ், இவர்கள்தாஞ நாட்டைநடத்த வந்தவர்கள். இவர்கள்தாஞ சோசலிச சமுதாயம் அமைக்

(15-ம் பக்கம் பார்க்க)

தம்பி

“இன்று சரியாகப் பதினொரு மணிக்கு, கழகத்தவர் பதினான்கு பேர்களுடன், என் அண்ணன், சென்னை சட்டசபை சென்று அமரப்போகிறார்.” என்று, அகமும் முகமும் மலர்ந்த நிலையில், பெரியதோர் வெற்றி, புதியதோர் வெறறி பெற்றோம் என்ற களிப்புடன் உன் போன்ற உள்ளம் கொண்ட எண்ணற்றவர்கள் பேசிக்கொண்டிருக்க,

“இந்தச் சனியன்கள் இன்று சட்டசபை நுழைகின்றனவாம். பதினோருமணிக்காம்! காலம் இப்படியுமா கெட்டுவிடவேண்டும்? கமலம் பூத்துக்குலுங்கும் தடாகத்தில், கசுமலம் சேருகிறது! கூனனுக்குக் கண்ணான காமராஜர் கொலுவீற்றிருக்கும் மன்றத்திலே இந்த ‘கண்ணீர்த்துளிகள’ செல்லுகின்றனவே!” என்று, தாமாக, வீணாக, வேதனையை வருவித்துக்கொண்டு, அவதிப்படுவோர் அங்கலாய்த்துக் கொண்டிருக்க,

“அடுக்குமொழி பேசி ஆளைமயக்கி, ஆகாத திட்டமெல்லாம் பேசி ஊரைக்கலக்கி, உதவாக்கரைக் கொள்கை கூறி உண்மைப் பண்புக்கு ஊறு தேடிடும், மாபாவிகள், வகுப்பு வாதிகள், பிளவு உண்டாக்கும் பேதைகள், நாம் நானிலம் கண்டு புகழத்தக்க விதமாக, நமது நாட்டினை நடத்திச் செல்வதற்கான அருமபணியாற்றக்கூடிடும் மணிமாடத்தில், கதிர் குலுங்கும் பயிரருகே மறைந்து கிடக்கும் களைபோல, முதது தூங்கும் கடலிலே ஊர்ந்திடும நத்தைபோல, முல்லை பூத்திடும் கொல்லையின் ஒருபுறம் கள்ளி இருத்தல்போல, பாதகப் போக்கினர் பதினைந்து பேர் வந்து அமரப்போகின்றனரே! அடாது இச்செயல் என பதனை அறிவிக்க, விண்மீன்கள் உதிர்ந்திடுமோ — ஆழ்கடல் வறண்டிடுமோ — வானம் இருண்டு, பேய்க்காற்று வீசி, இடி முழக்கி, மழை பெய்து வெள்ளக் காடாகிடுமோ! — என்றெல்லாம் எண்ணுவதற்கு, இது அக்காலம் அலலவே! தக்கோர்க்கு இடமளிக்குமாம், இடமளிக்க, தானே வளருமாம், மற்றையோர் அமர்ந்திட இடம் இராதாம, அன்றோர் நான் இருந்த சங்கப்பலகை ஒன்று! இற்றை நாளில், கற்றைச் சடைமுடியான், கண்ணுதலான் வீற்றிருந்து நடாத்தும் கழகம் ஏது? எனவேதான், ஏதோ நுழைகின்றன! என்செய்வது? நாமும், அங்கு அமர்ந்திட வேண்டி இருக்கிறது!,’ என்று சட்டமன்றத்தவர்களாகிவிட்ட காங்கிரஸ்காரர்களில் பலர், கவலை கொப்பளிக்கும் நிலையினராகி இருந்திட,

“அரும்பாடுபட்டோம், தூயதோர் திட்டத்தை உளமாரக்கொண்டு பணியாற்றினோம், எனினும் ‘பணம் பாதாளம்வரை பாயும்’ என்ற பழமொழியின வலிவு, நம்மைத் தாக்கியதால், தோல்வி பல இடங்களில் கண்டோம், துயரத்தைத் தாங்கிக்கொண்டோம். ஆளுங்கட்சியினர் 150-பேர் உளர்! நாம் இதில பத்தில் ஓர் பகுதியே! இந்நிலையில் உள்ளே செல்கிறோம். நமது உள்ளத்தில் உறைந்திடும் உததமக்கருததினை, எண்ணிக்கை அதிகமுள்ள காரணத்தால அவர்கள் எள்ளி நகையாடக்கூடும, துரைத்தனம் தமது என பதால், துடுக்குத்தனம் ஆகாது என்ற பண்பினையும் மறந்து, நம்மைத் துச்சமென்று எண்ணிடக் கூடும், இச்சிறு கூட்டம, எப்படியோ இங்கு வந்து இடம் பிடித்துக் கொள்கிறது! உண்டு மிஞ்சியதைக் காக்கையும் பெறுமலலவா! இதுகளுக்கு ஒரு பதி

# ஆலிங்கனமும்-அழிவும்!



னைந்துகிடைத்தது, அது போன்றதே! இந்தச் சிறு குழு, அடக்க ஒடுக்கமாக, ஆட்சிப் பொறுப்பும், அது அளிக்கும் கருவிகளும் கரு ஊலங்களும் மிகுதியாக எம்மிடம் உளது என்பதை அறிந்து எமது ஏவலர் போன்றிருத்தல் வேண்டும்! ஏன்? எப்படி? எது? என்று பேசிடத் துணிவரேல், எமது கோபப் பார்வையாலேயே சுட்டுச் சாம்பலாக்கிடுவோம்—என்றெல்லாம், காங்கிரசார், மிரட்டு மொழி பேசி, உருட்டு விழி காட்டுவரோ, என்ற ஐயப்பாடு தொடர்ந்திட, நாங்கள் பதினைந்து பேரும், சென்னைக் கோட்டையில் நுழைந்தோம்!!

கோட்டை! அகழ்—அரண்கொண்டதாக ஆங்கிலேயன் அமைத்த கோட்டை! அலைகடல் எதிரே! உள்ளே, அரசோச்ச, மக்களிடம் அனுமதி பெற்றோர் அமர்ந்திடும் இடம்.

இந்தக் 'கோட்டை'யை, பத்து இருபது ஆண்டுகளுக்கு முன்பு பார்த்து, பயம் வெளியே தெரிய ஒட்டாதபடி மிகச்சிரமப்பட்டு, மறைத்துக்கொண்டு,

பாருககுள்ளே நல்ல நாடு
எமது பாரதத் திருநாடு

என்ற பண்ணினை, வெண்மணற் பரப்பினையே மன்றமாகக்கொண்டு இசைத்து, எழுச்சியும் இன்பமும் பெற்றவர்கள்—இன்று கோலோச்சும் நிலைபெற்று,

கோட்டையும்
கொத்தளமும்
கோலும் கொடுமரமும்

எம்முடையதாகிவிட்டது காணீர்! என்று பேசும் நிலையில் உள்ளனர்.

இவர்கள் ஒருநாள் இந்நிலை பெறுவர் என்பதனை இருபதாண்டுகட்கு முன்னம், யூகித்தறிந்திட முடியாதிருந்த ஆங்கிலேயன், கொக்கரித்தானல்லவா.

இத்தனைக்கும், பிறர் கண்டறிந்திடாத பல கருத்துகளை அறிவாற்றலால், கண்டறிந்தவன் கால்சட்டைக்காரன்!

இங்கு தங்கம் கிடைக்கும்—இரும்பு இங்கு இருக்கும்—காட்டாற்றினை இதுபோலக் கட்டுப்படுத்தலாம்—காற்றினை இதுகொண்டு எதிர்த்து நீந்தலாம்—கடலுக்குள்ளேயே கலம் சென்றிட இயலும்—கல்லின் வயதையும் கணிக்கலாம்—என்ற இன்ன பிறவற்றிலெல்லாம், பெருமதி காட்டினவன்தான் வெள்ளையன்—எனினும், மறைந்துகிடந்த விஞ்ஞான உண்மைகள் பலவற்றினை, துருவித்துருவிக் கண்டறிய முடிந்ததே தவிர, அவனால் கொடி பிடித்துக்கொண்டு 'வந்தே மாதரம்' எனும் 'கோஷம்' கிளப்பிக்கொண்டு வருகிற ஒரு சிறு கூட்டம் அன்னிய ஆதிக்கத்தை அழித்தொழிக்க வேண்டும் என்ற எழுச்சியின், சிறு வடிவம் என்பதனை மட்டும், கண்டறிய முடியவில்லை!! ஆதிக்கம், அறிவினை அந்த முறையில் மழுங்கச் செய்து விடுகிறது!

அவன், கிரேக்க சாம்ராஜ்யம், ரோமானிய சாம்ராஜ்யம், உதுமானிய சாம்ராஜ்யம், எனும் பலப்பல ஆதிக்கப் பேரரசுகள், வீழ்ச்சி அடைந்த வரலாறு நன்கு படித்திருந்தான்—எனினும், தன் ஆதிக்க அரசு குலைந்துபோகாதிருக்க, அந்த வரலாற்றிலேயே, பாடம் தேடினான்—ஏதோ கிடைத்தது—அது தன்னை என்றென்றும் காப்பாற்றும் என்று எண்ணினான்—உண்மை திடீரென்று பிறகோர்நாள் அவனைத் தாக்கித் துரத்திற்று! தன்பேதைமையைப் புன்னகையால் மறைத்துக்கொண்டு, ஓட்டம் பெருநடையாய், ஊர்போய் சேர்ந்தான்!

தம்பி! நான் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்த நாட்களிலே, இந்தக் 'கோட்டை'யிலும் சூழவும் என்றென்றும் நம்மை யாரும் அசைக்க முடியாது என்ற எண்ணத்தை கக்கிக்கொண்டு கிடந்த வெள்ளையர்களைக் கண்டிருக்கிறேன். அவர்களின் நடமாட்டத்தைக்கண்டு நடுங்கி, நம்மவர்கள், அடங்கி ஒடுங்கிச் சென்றதையும் கண்டிருக்கிறேன்.

அவனே, 'எதிர்காலம்' இப்படி எல்லாம் வடிவெடுக்கக்கூடும் என்பதனை அறிந்து கொள்ளாதிருந்தான் என்றால், ஆளவந்தார்களாகிவிட்ட காங்கிரசார், எங்ஙனம், 'எதிர்காலம்' எப்படியெல்லாம் உருவாகிக்கொண்டு வருகிறது என்பதை அறிந்திட முடியும்.

குற்றம் அவர்கள் மீது அல்ல, தம்பி, கோலெடுப்போரில் பெரும்பாலோர், குறைமதியையே துணையாகக் கொண்டழிந்துபட்டனர்!

'கோட்டை'க்குள்ளே நுழைந்தபோது, இதுபோலெல்லாம் எண்ணிக்கொண்டேன்!

பீரங்கிக்குப் பக்கத்தில் நாம் நிற்கிறோம்—ஒரு மூங்கிலாலான கொடிமரத்தின் கீழே நின்றுகொண்டு, கொக்கரிக்கிறார்களே, சுயராஜ்யம் வேண்டும் என்று!! கோட்டை எம்மிடம்—வெட்ட வெளி நின்று வீரம் பேசுகிறார்களே!—என்று அன்று ஆங்கிலேயன் ஆணவத்தால் பேசினான். இன்று......!!—என்று எண்ணிக்கொண்டேதான் உள்ளே சென்றேன்.

வாழ்த்தொலி! ஆமாம்! கோட்டையானலென்ன, கொத்தளமானலென்ன—எப்படியோ பெருந்திரள் கூடிவிட்டது, வாழ்த்தொலி கூறிட!!

இந்தப் 'பதினைந்துக்கே' இவ்வளவு ஆர்ப்பாட்டமா...என்ற அலட்சியத்தைத் துணைக்கு அழைத்துக்கொண்டு, காங்கிரஸ் அன்பர்கள் உள்ளே நுழைந்தனர்.

கொட்டும் மழையில், குடையுமின்றி, எட்டாண்டுகளுக்கு முன்பு இராயபுரத்தில் ஓர் வெட்ட வெளியில், நின்று பேசினோம்—நினைவிலே இருக்குமே, தம்பி!! பெரியாரின் போக்கால் நாம் அதுவரை உகுத்த கண்ணீரின் அளவினைக் காட்டுவதற்கு இயற்கை எடுத்துக்கொண்ட முயற்சி போன்றிருந்ததல்லவா, அன்று பெய்த மழை; அன்று துவக்கப்பட்ட, திராவிட முன்னேற்றக் கழகம், சதிகளைச் சகித்துக்கொண்டு, சூழ்ச்சிகளுக்கு இரையாகாமல், எதிர்ப்புகளால் முறிந்து போகாமல், பழிச்சொல்லால் பாழ்படாமல், நம்மை அழித்தொழிக்க எண்ணுவோர் எத்துணை தரக்குறைவாக நடப்பினும் நாம் நமது முறையையும் நெறியையும் தரம் கெடாமல் பார்த்துக் கொண்டு, நாட்டு மக்களின் நம்பிக்கையை மெள்ளமெள்ளப் பெற்று, அரசியல் கழைக்கூத்தாட்டம் நடத்தாமலும், மயிர்க் கூச்செறிய வைக்கும் செயல்களைச் செய்து காட்டாமலும், அந்த நம்பிக்கையை, நமது பண்பு நிறைந்த பணியின் மூலமே பெற்று, ஒரு பொதுத் தேர்தலில் ஈடுபட்டு, அந்தப் பாரத்தைத் தாங்கிக்கொண்டு, ஒரு பதினைந்து பேர், கோட்டைக்குள்ளே நுழைந்திடத் தக்க நிலையையும் பெற்றிருக்கிறோம்.

மணி பதினொன்று—நல்ல வெயில்—எனினும், என் மனக் கண்முன் அப்போது, துவக்க நாளன்று பெய்த மழைதான் தெரிந்தது.

அடாது மழை பெய்தாலும் விடாது கூட்டம் நடந்தே தீரும்—என்று குடந்தை நீலமேகம் பேசின காட்சி தெரிந்தது!! அந்தத் திடல்—அதிலே, மழையால் ஏற்பட்ட சகதி—அதனைப் பொருட்படுத்தாமல் பெருந்திரள் கூடி நின்றிருந்தது—எல்லாம் மிகத்தெளிவாக எனக்குத் தெரிந்தன!

அந்த 'நாம்'—இன்று இங்கே!!—என்று எண்ணிக் கொண்டபோது—எனக்கு உள்ளபடி, தம்பி, 150—15—என்ற இந்தக் கணக்கு மறந்தே போய்விட்டது—திக்குத் தெரியாத காட்டிலே, தத்தி நடந்த சிற கொடிந்த பறவைபோன்றிருந்தோம் அன்று — இன்று நொண்டி நடந்துகொண்டேனும், இந்த 'ஆட்சிமன்றம்' நுழைந்திருக்கிறோம்—இந்தக் கட்டம் வரையில், வளர முடிந்ததே, வளர, நாடு ஊட்டம் அளித்ததே, நல்லோர் துணைபுரிந்தனரே, என்று எண்ணினேன்—நன்றி கூறியபடி, உள்ளே நுழைந்தேன்

இதற்கு ஏன் இவர்கள் இத்துணைக்களிப்படைகிறார்கள் என்று எண்ணிக்கை பெருத்தோர் கேட்கின்றனர்—அவர்களுக்குப் புரியாது; இந்தக் 'கட்டம்' வந்தடைவதற்கு முன்பு, நாம் நடந்துசென்ற பாதையிலே என்னென்ன படுகுழிகள் — சரிவுகள் — சதுப்புகள் — இருந்தன என்பது அவர்கட்கு எப்படித் தெரியும். அவர்கள் ஒரு 'மகாத்மாவின்' 'மந்திரக்குளிகை' அணிந்துகொண்டு இந்த மன்றம் வந்திருக்கின்றனர்! ஆகாய விமானமூலம் ஆறுயிரம் மைல் பயணம் செய்தவன் அலுப்பாக இருக்கிறது என்று ஆறு கல் நடந்து வந்தவனிடம் கூறும்போது, கேலிப் புன்னகை செய்வது போல, அவர்கள் நிலை இருக்கிறது. அவர்களில், எத்தனைபேர், நாம் கண்ட எதிர்ப்புகளின் வகையை, அளவைத் தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாக இருக்க முடியும், என்ற ஒரே எண்ணத்துடன் நான் அங்கு அமர்ந்திருந்த காங்கிரஸ் அன்பர்களைக் கவனித்துப் பார்த்தேன்—அவர்கள் நான் கூறுவது கேட்டு வருத்தப்பட்டுக்கொள்ளக்கூடாது—அவர்களில் மிகச்சிலரே—விரல்விட்டு எண்ணக் கூடிய மிகச்சிலரே, அத்தகைய உள்ள உரம் படைத்தவர்கள்!! நிச்சயமாக!!

கொட்டும் வறுமையைத் தாங்கிக்கொண்டு, உனக்கேனடா இந்த ஊரைத்திருத்தும் வேலை—என்று கோபத்துடன் அல்ல—வேதனையுடன் கேட்டிடும் பெற்றோரின் பெருமூச்சைக் கேட்டுக் கலங்கிச் செயலற்றுப்போகாமல், ஊரிலுள்ள உலுத்தனெல்லாம் ஓம் நமச்சிவாயா! என்று கூறிவிட்டு ஊர்க்குடி கெடுத்துக்கொண்டே, 'உலகமல்லவா அழிந்துபடும் இந்த உதவாக்கரைகளை வளரவிட்டால், இதுகள் சாமியே கிடையாது என்றல்லவா பேசுகிறதுகளாம்' என்று கொதித்துப் பேசுவதைப் பொறுமையுடன் கேட்டுக்கொண்டு, பத்திரிகைகள் இருட்டடிப்பாலும், இட்டுக்கட்டுவாதத்தாலும் தாக்க, அதனால் தகர்ந்து போகாமல், அடித்தால் சிரித்து, ஆத்திர மூட்டப் பேசினால், அன்பு காட்டி, நாம் நமது பணியினைத் தொடர்ந்து நடத்தி வந்தது போல, இதோ இந்த 150-பேர்களில் எத்தனைபேர்களால் முடிந்திருக்கும்—என்று, நான் மிகக் கூர்மையாகவே கவனித்துப் பார்த்தேன்—மிகச் சிலரால்தான் முடிந்திருக்கும். நிச்சயமாக!!

அதோ இராமநாதபுரம் ராஜாவும், செட்டிநாட்டு ராஜாவும அமர்ந்திருக்கின்றனர்.

அவர்களுக்கு அவர்களுடைய 'முன்னோர்' வைத்து விட்டுப்போனது, செல்வம் செல்வாக்கு—மாட மாளிகை கூடகோபுரம்—வியாபாரம்—முதலியன!!

அவர்கள் ராஜ குடும்பத்தில் பிறந்தார்கள்—'ராஜோபசாரம்' பெற்று வளர்ந்தார்கள்!!

அவர்கள் கூட, தாமும் சில பல, பாடுபட்டுத் தேடிப்பெற்று அனுபவித்தால்தான் 'சுவை' மிகுதியாக இருக்கும் என்பதறிந்திருக்கிறார்கள்.

இதோ காங்கிரஸ் அன்பர்கள் இருக்கிறார்களே, இவர்கள் ஒவ்வொருவரும், 'மகாத்மா' அரும்பாடுபட்டு, சபர்மதியில் தவமிருந்து, எரவாடாவில் சிறையிருந்து தண்டியில் யாத்திரை செய்து, உண்ணாவிரதமிருந்து, உலகையே ஒரு கலக்கு கலக்கி, பெற்று வைத்து விட்டுப் போயிருக்கும், பெருஞ் செல்வத்தை ரசித்து ருசி பார்த்துக் கொண்டிருப்பவர்கள்—இவர்களுடைய 'சாதனைகள்' என்ன என்று கேட்டு விடாதீர்கள்—சுவைக்கத் தெரிந்திருக்கிறதே! மோப்பம் பிடித்து இரை கிடைக்குமிடம் கண்டறிந்தது ஒரு சாதனை அல்லவா!!

நாம்—தம்பி! மகாத்மாக்களின் மாநிதிக்கு 'வாரிசு'களாக முடியவில்லை. நாமே—காடு திருத்தினோம். கழனியாக்கினோம்—வரகோ, சாமையோ, அது நமது உழைப்பின் பலன் — எனவேதான், பதினைந்து பேர் உள்ளே நுழைந்தபோது வாழ்க! என்றனர். பொருளற்று அல்ல! அதன் பொருளை, பிறருடைய சேமிப்பில் வாழ்வு நடாத்துவோர் உணர்ந்து கொள்ளத்தான் முடியாது!

இங்கே நான் பார்க்கிறேன்—காங்கிரஸ் கட்சியால் நிறுத்தப்பட்டு வெற்றிபெற்று அமர்ந்திருக்கும் 150 பேர்களை!

அதென்ன அண்ணா! காங்கிரஸ் கட்சியால் நிறுத்தப்பட்டவர்கள் என்று சுற்றி வளைத்துப் பேசுகிறாய்—காங்கிரஸ்காரர் என்று சுருக்கமாகக் கூறக் கூடாதோ என்று கேட்காதே தம்பி, இவர்கள் அத்தனை பேர்களையும், காங்கிரஸ்காரர் என்று, கூற, மனம் இடம் தரவில்லையே, என் செய்ய!

அவர்களுக்கு அங்கு இடம் கிடைத்திருக்கிறது—உன் மனம் இடம்தராது போவதென்ன என்றுகேட்டு என்னைத்தொல்லைப்படுத்தாதே, தம்பி, கரையான் புற்றெடுக்க பாம்பு குடிபுகுந்துவிடுகிறது. —பாம்புப் புற்று என்றுதானே பெயர் மாறவேண்டும்!! அவர்கள் புதிய பொருத்தமான பெயர் சூட்டிக்கொள்ளவில்லை—பழைய பெயரிட என்மனம் இடம்தரமிவுல்லை, நான் என்ன செய்ய!

இதோ, நாகைத் தொகுதியிலிருந்து காங்கிரசால் நிறுத்தி வைக்கப்பட்டு வெற்றிபெற்று என் முன் அமர்ந்திருக்கும், என். எஸ், இராமலிங்கத்தைக் காண்கிறேன்; ஒரு பெரிய புத்தகமல்லவா, என் முன் திறந்து வைக்கப்படுகிறது!!

நெடும்பலம் சாமியப்பா பெருநிலக்கிழார்—நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவர்—மிக நல்லவர்; அவருடைய திருக்குமாரர் இராமலிங்கனார், இவர் கதரணிந்து காமராஜரைக் கைகூப்பிக் கும்பிட்டுவிட்டு, ஆளுங் கட்சியினரின் பகுதியில் அமருகிறார்—இதோ நான், அந்த நெடும்பலத்தாருடைய அரசியல் நடவடிக்கைகளிலே நேசத்தொடர்ப்பு கொண்டு, காங்கிரசை எதிர்த்து, வருபவன்.

தஞ்சை மாவட்டத்துக் காங்கிரசின் வலிவு முழுதும் திரட்டி, நெடும்பலத்தாரைத் தாக்கினர்.

தேர்தலில் தோற்றாலும் தோற்பேனேயன்றி, என் உள்ளத்துக்கு ஒத்துவராத கொள்கையை, உடன்பாடு

உடையதுதான் என்று தலையாட்டிவிட்டு, தப்பிப் பிழைக்கவிரும்பவில்லை—என்று துணிவுடன் கூறினவர்—தொல்லை பலவற்றினுக்கு ஆளானவர்—ஆனால் தலை இறக்கம் கூடாது என்று இறுதி வரையில் வீரமாகவே இருந்தவர்.

இதோ, அவர் மகன் அமர்ந்திருக்கிறார்—ஆற்றல் மிக்க அவர் தந்தையால் சாதித்துக்கொள்ள முடியாததை, மகன் சாதித்துக் கொண்டிருக்கிறார், என்று என்னை வாழ்த்தச் சொல்லுகிறாய்.

எதிர்ப்புக்கு அஞ்சாத அந்த அடலேறு, வீழ்ந்து பட்டதிலேயும் ஓர் வீரம் காணக்கிடந்தது! எங்ஙனம் அதனை மறந்திடச் சொல்லுகிறாய்! எக்காரணம் காட்டி என். எஸ். இராமலிங்கனாரைக் காங்கிரஸ்காரர் என்று கூறச்சொல்லுவாய்!

காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டவர் — அவ்வளவுதான் கூறலாம்!!

இவர் போன்றோர்தானே பெரும் பகுதி—அந்த 150ல்!!

நான் சிறுவனாக இருந்தபோது, கடைவீதியில், 'கலர்' சாப்பிடச் சென்றேன் ஒரு தடவை. அந்தக் கடையில் இரு பக்கங்களிலும், அழகழகான கலர் பாட்டில்கள் இருந்தன. அதில் ஒன்றைக் காட்டி, அது கொடு' என்றேன். கடைக்காரர் சிரித்துக்கொண்டே தம்பி! அது, சும்மா அழகுக்காக கலர் தண்ணீர் ஊற்றி வைத்திருக்கிறது—சாப்பிட அல்ல—என்று கூறிவிட்டு, உள்ளே இருந்து ஒரு கலர் கொண்டுவந்து கொடுத்தார்.

காமராஜரின் முறையும் அதுவாகவே இருக்கிறது!

காங்கிரஸ்காரர் சிலர்—மிகச் சிலர், காங்கிரசால் நிறுத்திவைக்கப்பட்டவர்கள் ஏராளம்!

பாரேன், தம்பி, வேடிக்கையை—நான் பம்பரம் ஆடும் பருவத்திலே, அங்காடியில் கண்ட முறையை, என் மகன், 'பாட்மின்டன்' ஆடும் பருவம் பெற்றிருக்கிற இன்று அரசியல் அங்காடியில் பார்க்கிறேன்! விசித்திரமான உலகம், தம்பி இது.

"என்ன சட்டசபைக்குச் சென்றிருக்கிறீர்கள் இதைக் கண் குளிர அப்பா, பார்த்திருப்பார், கொடுத்து வைக்காதவர்கள், நாம்—"

என்று, இராமலிங்கனார் இல்லத்தில், எவரேனும் அவரிடம் கூறினால், அவர் பாபம் பயந்தல்லவா போவார்!

> "அப்பாவின் அஞ்சா நெஞ்சு எங்கே! இதோ நான் தஞ்சம் புகுந்து ஒரு இடம் பெற்றேனே—இதுபோலப் பணிந்திட அவர் இசைந்திருந்தால், மந்திரியேகூட அல்லவா ஆகியிருக்க முடியும். புயல் அடித்தாலும் கலத்தைச் செலுத்துவேன்—கலமே மூழ்குவதானாலும், கூடச் சேர்ந்து மூழ்குவேனே அல்லாமல் தலை தப்பினால் போதும் என்று ஓடிவிடமாட்டேன் என்று கூறிடும் வீரமாலு மிக்கு இருந்த உள்ள உரம் அவரிடம் இருந்தது. நான்...சேச்சே! அவர் இருந்து இந்தக் காட்சியைக் காணுவதா?—மகனே! மகனே! இதென்ன, எனக்குத் தெரியாத வித்தை என்று எண்ணிக்கொண்டாயோ! என் உறுதியை உனக்களிக்க முடியாது போய்விட்டதே என்னால்! என்னைக் கேலி செய்யவா இந்தப் புதிய கோலம் பூண்டனை! என்றல்லவா கேட்பார். நல்லவேளை, அவர் இல்லை—

என்றல்லவா, இராமலிங்கனார் எண்ணுவார்.

யார் தெரிகிறதா?"

யார்? வாலிபப் பருவமாக இருக்கிறார் வசதியானவர் போலிருக்கிறது."

"பெரிய பிரபுக் குடும்பமய்யா—பெருநிலக் கிழாராக்கும்!"

"தஞ்சை ஜில்லாவோ"

"சாட்சாத் தஞ்சையேதான்! நெடும்பலம் சாமியப்பா என்று கேள்விதானே!"

"அடேயப்பா! அசகாய சூரராச்சே!! இந்தப் பன்னீர்செல்வமும் சாமியப்பாவும் கூடிக்கொண்டு தஞ்சாவூர் ஜில்லாவில், காங்கிரசைக் கண்ட துண்டமாக்கினார்களே"

"அந்தச் சாமியப்பாவின் மகன்—நம்ம வலையில்—பார்த்தாயா, புத்தம் புதிய கதர்ச் சட்டை!"

"எமகாதகப் பேர்வழி என்றால், உமக்குத்தானய்யா தகும்! சாமியப்பர் மகனையே, காங்கிரசில் இழுத்தாச்சா?

"கெண்டையை போட்டு வரால் இழுக்கணும்"

"ரொம்பக் காலமாக அந்தக் குடும்பம் காங்கிரசுக்கு எதிர்ப்பாயிற்றே—எப்படிக் காங்கிரசில் சேரச் சம்மதித்தார்?

"என்னய்யா, அப்படிக் கேட்கறே! ஆவடியிலே சமதர்மத் தீர்மானம் போட்டுவிட்டு இப்படிப்பட்ட ஆசாமிகளைக் காங்கிரசிலே எப்படிச் சேர்க்கலாம் என்றல்லவா கேட்க வேண்டும்?"

"இரண்டும்தான் கேட்கிறேன் என்று வைத்துக்கொள்ளுமே."

"சரி, பதில் சொல்லட்டுமா?"

"பதில் சொல்லத்தானே கேட்கிறேன்"

"நான் ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லும்"

"இதென்ன வேடிக்கை, உம்மை நான் கேள்வி கேட்டால்......

"நான் கேள்வி கேட்கிறேனே, பதில் கூறாமல் என்கிறீரா? என் கேள்வியிலேயே உமக்குப் பதில் இருக்கிறதய்யா, தேர்தலில் வெற்றிபெறக் கதர் சட்டை மட்டும் போதுமா?"

"போதாது"

"பணம் வேண்டுமல்லவா?"

"வேண்டும்"

"சரி! இவரிடம் பணம் இருக்கிறது—நம்மிடம் சட்டை இருக்கிறது! எப்படி!!"

"பலே! பலே! இப்படிப்பட்டவர்கள் கிடைக்கிறவரையில், உமக்கென்ன—யோகம் தான்"

இவ்விதம் ஒரு வட்டாரத்தில் உரையாடலும், மற்றோர் வட்டாரத்தில்,

"நம்ம நெடும்பலத்து இராமலிங்கமில்லாவிட்டால், நாகையில், காங்கிரஸ் என்ன ஆகியிருக்கும்?"

"மண்ணைக் கவ்வி இருக்கும்?"

"காங்கிரஸ் என்ருல் கட்டோடு பிடிக்காதே அவருக்கு, எப்படி அதிலே சேர்ந்தார்?"

"அவராகவா, சேர்ந்தார்! கெஞ்சி, கூத்தாடி, காலைப் பிடித்துக்கொண்டு, காங்கிரசின் மானத்தைக் காப்பாற்ற வேண்டும்—உங்களால்தான் அது முடியும் என்று மந்திரிகளே வந்து தூண்டினார்கள், இல்லாவிட்டால், அவராவது காங்கிரசில் சேருவதாவது..."

"காங்கிரசில் சேர்ந்தால் காசு பணம் செலவில்லாமல் ஜெயிக்கலாம் என்று எண்ணினுர் போலும்"

"காசு பணமா! சேச்சே! மகாத்மாவுக்கு ஜே! என்று சொன்னதால், குரல் கெட்டிருந்ததே, அவர்களுக்குக் காப்பி வாங்கிக்கொடுத்தது தவிர, வேறு செலவு ஏது?"

"என்ன, அவ்வளவு வெறுப்பாகப் பேசுகிருய்?"

'வேறே எப்படிப் பேசுவது? பணம் கொஞ்சமாகவா கரைந்திருக்கிறது. ஆனந்தம், காங்கிரசுக்கு! அலுப்பு நம்மவருக்கு"

என்றவிதமான பேச்சு; மற்ருேர் இடத்தில்,

"அடிபட, உதைபட, சட்டம் மீற நாம்—சட்டசபை செல்ல, சீமான், பூமான்! இந்த இலட்சணத்துக்கு நமக்கு சமதர்மத் திட்டமாம்"

என்று மனம் நொந்து பேசுவதுமாக நிலைமை இருப்பது எனக்குத் தெரிகிறதே. தம்பி, எப்படி, 150 காங்கிரஸ்காரர் என்று கூறத் துணிவு பிறந்திட முடியும்? காங்கிரசால் நிறுத்திவைக்கப் பட்டவர்களைத்தான் நான் இங்கு பெரும்பாலோராக இருக்கக் காண்கிறேன்.

பனைமரத் துண்டுக்குச் சாயமடித்து பீரங்கி போலாக்கித் தரையிலே வைத்துவிட்டு, விமானத்திலிருந்து பார்க்கிற எதிரியை ஏமாற்றுகிருர்கள் என்று முன்பு பிரிட்டிஷாரைப் பற்றிச் சொன்னுர்களே, அது போல

செட்டிநாட்டு ராஜா
இராமநாதபுரம் ராஜா
மதுக்கூர் ஜெமீன்தார்
நெடும்பலம் மிராசுதார்
இராமசாமி படையாச்சி
எல்லைவீரர் விநயகம்
சேனபதிக் கவுண்டர்
பழனிச்சாமிக் கவுண்டர்

போன்ருேர்களல்லவா கதர் அணிவிக்கப்பட்டுக் காட்சி அளிக்கின்றனர். இந்நிலையில் காங்கிரஸ்காரர் 150-பேர் அங்கு அமர்ந்திருக்கக் கண்டேன் என்று எங்ஙனம் கூற முடியும்?

எண்ணிக்கை பெருத்திருக்கிறதே தவிர, அது வலிவின் அறிகுறியுமல்ல, பொலிவுக்குகந்ததாகவுமில்லை.

எப்படியேனும் இடம் பெறவேண்டும் என்ற பேராவல் கொண்டோரும், யாரைப் பிடித்தாகிலும், கட்சிக்கு வெற்றி என்ற கணக்கைக் காட்டவேண்டும் என்ற தந்திரம் தெரிந்தோரும் ஒன்றுகூடி, நடத்திய 'பண்ட மாற்று! திறம்படப் பலன் அளித்திருக்கிறது என்று வேண்டுமானுல் கூறிப்பாராட்டலாம்; காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்கு புதிய வலிவு கிடைத்துவிட்டிருக்கிறது, என்று எப்படிக் கூற முடியும்?

சட்ட மன்றத்தில் என் எதிர்ப்புறம் அமர்ந்திருந்தவர்களைக் கண்டதும், எனக்கு அவர்களைக் காணுத முன்பு, வெறும் எண்ணிக்கையை மட்டுமே எண்ணிக்கொண்டிருந்தபோது, இருந்த அச்சம்கூட நீங்கிவிட்டது.

அச்சப்பட வேண்டியவர்களும், ஆயாசப்பட வேண்டியவர்களும் காங்கிரஸ் கட்சியை, அது காடு சுற்றிய கால முதற்கொண்டு நாடாளத் தொடங்கிய நாள் வரையில் கட்டிக் காப்பாற்றி, அதன் வளர்ச்சிக்காக கண்ணீரும் செந்நீரும் கொட்டினுர்களே, அவர்கள்தான், டி. டி, கிருஷ்ணமாச்சாரிகளல்ல!

காங்கிரஸ் கட்சிக்கு எண்ணிக்கையில் அதிகமாக வெற்றி கிடைத்தது என்ருலும், உண்மைக் காங்கிரஸ், அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைக்கப்பட்டுவிட்டது என்பதை உணருகின்ற சிலர் அச்சப்படுகிருர்கள், ஆயாசப்படுகிருர்கள்.

> இன்று காங்கிரசுக்குள் அழிவுச் சக்திகள் புகுந்துவிட்டன. இதனுல் என்றுமில்லாத அளவுக்குக் காங்கிரஸ் பலவீனம் அடைந்துள்ளது. தக்க சமயத்தில் நாம் தடுக்காவிட்டால், அழிவு நிச்சயம்.

இது, யாரோ, நிலம் கிடைக்காத 'தியாகி'—அல்லது காமராஜர் தமிழரின் பாதுகாவலர் என்ற பேருண்மையை உணர மறுக்கும் அப்பாவி, பேசியது என்று எண்ணிவிடப் போகிருர்கள். இவ்வாறு, காங்கிரஸ் அழிந்துகொண்டு வருகிறது என்று கூறுபவர், மொரார்ஜிதேசாய்.

சென்ற திங்கள் இறுதியில் ராஜ்கோட்டில், காங்கிரஸ் மாநாட்டில், பேசி இருக்கிருர்.

எனக்குத் தம்பி, வலைவீசி ஆள் பிடித்து, சிக்கினுேரை ஆட்டிப் படைத்து, ஆதிக்கத்தைக் காப்பாற்றிக்கொள்ளும் ஒரு வல்லவரும்—இந்த இடமாவது கிடைத்ததே, இதுபோதும், இறைவா! இறைத்த பணத்துக்கு இதுவும் கிடைக்காமற் போயிருந்தால் என்ன செய்வது!!—என்று எண்ணிக் கொள்ளக்கூடிய 'நல்லவர்கள்' ஏராளமாகவும், அயன் சரக்கோ போலியோ, நமது அங்காடி நிறையச் சரக்கு நிரப்பிக் காட்ட முடிகிறது. அதுபோதும் என்று திருப்திகொள்கிற சிலரும்தான், இங்கு இருப்பது தெரிகிறது, எனவே, தியாகிகளை, வீரதீரப் போராட்டம் நடத்தியவர்களை, காங்கிரசுக்காகக் குருதி கொட்டியவர்களை, ஏராளமாகக் கொண்டதோர் வீரக் கோட்டத்துக்குள்ளே, நாம் ஒரு பதினைந்து பேர் நுழைந்து விட்டோமே அவர் தம் ஆற்றலுக்கு எங்ஙனம் ஈடுகொடுப்பது — அவர்கள் மத்தியில் அமர்ந்து எங்ஙனம், நமது உரிமைகளுக்காக வாதாடுவது—என்ற அச்சம் எழக் காரணம் இல்லை.

எனவே, நானும் நமது கழகத்தவரும், உள்ளே வந்து பார்த்ததில், புதிய நம்பிக்கையே கொள்கிருேம்; நமது பணியினைத் திறம்படச் செய்ய இயலும் என்ற உற்சாகம், நிரம்ப ஏற்படுகிறது.

எதிர்ப்புறம் இருப்பவர்களிலே மிகப் பெரும்பாலானவர்கள், அரசியலில் 'பல ஜென்மம்' எடுத்தவர்கள்,

சிலர், 'தத்து' எடுக்கப்பட்டவர்கள், வேறு சிலர் எந்தக் கட்சிக்கு வலிவு ஏற்படுகிறதோ, அந்தச் சமயத்தில் அதில் இருப்பவர்கள்,

விளைந்த காட்டுக் குருவிகள் ஏராளம்!

வாடி இருக்கும் கொக்குகளும் உள்ளன!

சொன்னதைச் சொகுசாகச் சொல்ல வல்ல பஞ்சவர்ணக் கிளிகள் சில உள!

மரம் பழுத்தது. பழம் நமக்குத்தான் என்றெண்ணிக் கொண்டு, வட்டமிட்டு வந்து, கிடைக்கப் பெறாததால், துயரத்துடன் தொங்கிக் கிடக்கும் வௌவால்களைக் காண்கிறேன்!

"மாடப் புருவுக்குக் கண்ணி வைத்தேன்!

மரங்கொத்திமாட்டிகிட்டுது, தங்கமேதில்லாலே!" என்று பாடுவார்களே, அதுபோல் எதை எதையோ எதிர்பார்த்து ஏமாற்றமடைந்தோரையும் காண்கிறேன்!

ஏராளமாக—மன்றத்தின் பெரும் பகுதியை நிரப்பிக் கொண்டு இருக்கிறார்கள்—ஆனால் அவர்களில், உண்மையான காங்கிரஸ்காரர்களை,

தடியடி
சிறைவாசம்
சத்யாக்கிரகம்
உப்புக் காய்ச்சுதல்
மறியல்
தண்டியாத்திரை

போன்றவைகளைக் குறித்து எண்ணும்போதே, நெஞ்சு நெக்குருக, கண்கள் நீர்துளிர்க்க ஆம்! ஆம்! அந்த வீர தீரப் போராட்டமெனும் தணலில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தங்கக் கட்டிகள் நாங்கள்—என்று உரிமையுடன் கூறிக் கொள்ளக் கூடியவர்கள், மிகச் சிலரே, உளர்!

செஞ்சிக்கோட்டை செல்பவரை எல்லாம் தேசிங்கு ராஜாவென்று கூறுவது!; இங்கே, இந்தக் கோட்டையிலும், கதர்ச் சட்டை இருக்கிறவர்களை எல்லாம், காங்கிரஸ்காரர் என்று கூறுவதற்கில்லை.

எனவே, எங்கள் எதிரில் உள்ள உண்மையான காங்கிரஸ்காரர்கள், நாங்கள் எவ்வளவோ அந்த எண்ணிக்கை அளவுதான் இருக்கும்.

நாம், 15! இத்துடன் ஒரு 'சைபர்'–சேர்க்கப்பட்டு 150 ஆகியிருக்கிறது!! — என்று நான் கூறுவதை நையாண்டி என்று கருதிவிடாதே, தம்பி அதிலே, இன்றைய அரசியல் நிலைமை தொக்கி நிற்கிறது, சைபருக்குத் தனியாக மதிப்பு இல்லை—வேறு எண்ணுடன் சேரும்போது சைபருக்கென்று புதிய மதிப்பு பிறப்பதுமில்லை—சைபர் எந்த எண்ணுடன் சேருகிறதோ அந்த எண் மட்டும் பெருத்துவிடும்.

இதே முறையிலேதான் எண்ணிக்கை இங்கு பெருத்திருக்கிறது; உண்மையில் வலிவு அல்ல இது, இரவல்!!

நான், வேண்டுமென்றே குறைத்து மதிப்பிட்டுக் காட்டுகிறேன், என்று கூறி, காங்கிரஸ் நண்பர்கள் திருப்தி தேடிக்கொள்வர்—அது அவர்கள் விருப்பம்—நான் குறுக்கிடவில்லை.

52 நிலப்பிரபுக்கள்
14 மில் முதலாளிகள்
21 பெரும் வர்த்தகர்கள்
15 பஸ் முதலாளிகள்
35 மாஜி காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள்

இப்போது சென்னை சட்டசபையில், 150 காங்கிரஸ்காரர்கள் இருப்பதாகப் பேசிப் பெருமைப்படுகிறார்களே—அவர்களை பம்பாய் ஏடு ஒன்று, 'ரகவாரியாக'ப் பிரித்துக் காட்டியிருக்கிறது!!

இதற்கு என்ன சொல்லுகிறார்கள்! நான் சொன்னால் கோபம் பொத்துக்கொண்டு வருகிறதே—பம்பாய் இதழ் பரிகாசம் செய்கிறதே!!

சட்ட மன்றத்தில் அமர்ந்திருக்கும், இந்தக் 'கனவான்'களுக்கு, காங்கிரசின் எதிர்காலம் குறித்து என்ன அக்கறை ஏற்பட முடியும்? காங்கிரசின் உள்ளிருந்து கொண்டே, அதனை உருக்குலைக்க வைத்திடுவது தவிர, இவர்களால் வேறு என்ன 'தொண்டு' ஆற்ற முடியும்? கொடிய நோய்களை மூட்டிவிடுகிற 'கிருமிகளில்' பார்க்க அழகானவைகளும் உள்ளன என்கின்றனர் மருத்துவ வல்லுநர்கள். காங்கிரசில், 'கிருமிகள்' ஏராளமாகப் புகுந்து விட்டிருப்பதுதான் எண்ணிக்கை பெருத்திருப்பதாகத் தோற்றமளிக்கிறது.

ஏற்கனவே, நான் இந்த உண்மையை ஓரளவு அறிந்தவனே என்றாலும், இங்கு உள்ளே வந்து காணும் போது, மிகத் தெளிவாகத் தெரிகிறது—காங்கிரஸ்காரர்கள் அதிகமாக இல்லை—காங்கிரசை வீழ்த்தியவர்கள்—அதிகம் உளர்.

பாரதத்திலே இருந்து ஒரு எடுத்துக் காட்டு தருவது கண்டு, ஏனண்ணா, இந்தக் குப்பை என்று சலித்துக்கொள்ளாதே தம்பி, 'அவர்களுக்காக' 'அவர்கள்' அறிந்த 'அவர்கள்' கதையிலிருந்து ஒரு எடுத்துக் காட்டு.

திருதராஷ்டிரன் — துரியனின் தந்தை! — யாரையேனும் அழிக்க வேண்டுமென்றால், வாள், வேல், கதை, சூலம் போன்ற ஆயுதங்கள் தேடுவதில்லையாம் —ஆலிங்கனம் செய்துகொள்வானும்! அது போதுமாம் அழித்திட!

'திருதராஷ்டிர ஆலிங்கனம்' என்று புராண பாஷையில் கூறுவார்கள்!

ஒரு அணைப்பிலா, ஆளுக்கு அழிவு நேரிட்டுவிடும் என்று கேட்காதே—தம்பி!–ஆலிங்கனங்கள், ஆசாமிகளை என்ன, அரசுகளையே அழித்திருக்கிறது – ரோம் நாட்டு வரலாற்றில் காணலாம்-தம்பி! ரோமாபுரி ராணிகள் என்ற புத்தகம் எழுதியவன் என்று நமது நிதிமந்திரி ஏற்கனவே என்மீது கோபித்துக் கொண்டிருக்கிறார்—மேலும் விளக்கம் கூறினால் இந்தக் கோடை காலத்தில் அவருக்குத் தொல்லை–கோபம் வரும் – என்பதற்காக, கோடிட்டுக் காட்டி நிறுத்திவிடுகிறேன்.

சட்டசபையில் நான் இந்தத் 'திருதராஷ்டிர ஆலிங்கனம்' காண்கிறேன்!!

அண்ணன்,

அண்ணாதுரை

(5—5—57 திராவிட நாடு இதழில்)

சிறுகதை:

# ஒட்டு மாம்பழம்

— நிலவழகன்

"அட அது இருக்கும் கருப்புக்கு காதோரம் பூவேரு? நடக்கிற நடையைப் பாரு..."

"என்னுப்பா ஆறுமுகம் நீயா பேசிக்கிறே" என்றேன் நான்.

"நான் என்னத்தை சார் பேசரேன்; அதோ போருங்களே அந்த அம்மா..."

"அம்மாவா?"

"ஆமாம் சார்; அந்த ஆசிரியை அம்புஜத்தைப் பாருங்களேன்" என் பார்வையை அவர் சுட்டிக் காட்டிய பக்கம் திருப்பினேன். அம்புஜம் ஆசிரியைபோய்க்கொண்டிருக்கிருள். ஆறுமுகம்; அவங்க மேலே குறை இல்லே; அவரைப் படைச்ச கடவுளைதான் சொல்லனும். இப்படி ஒரு அகோர உருவத்தைப் படைத்து அவர்களுக்கு ஒரு ஆசை —ஆடவர்களைக் கவரவேண்டும் என்றும் படைத்தானே அவனைச் சொல்லவேண்டும். மற்றவர்களை வசீகரிக்க வேண்டும் என்று தன்னை அலங்கரித்துக்கொள்வதுகூட ஒரு பலவீனம்தான் அதை ஒருகுறையாக நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அப்படி அலங்கரித்துக்கொள்வது குறை-பலவீனம் என்று வேண்டுமானுல் அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்" என்று சொல்லிக் கொண்டே பள்ளிக்கூடம் நோக்கி நடந்தேன் நான்.

சக ஆசிரியர் அதைக் கேட்டு மறுமொழி ஒன்றும் சொல்லவில்லே. இருவரும் பள்ளி வந்து சேரும்வரை ஒன்றும் பேசிக்கொள்ளவில்லே,

என் மனம் என்னவோ ஆசிரியை அம்புஜத்தைப்பற்றியே எண்ணிக் கொண்டிருந்தது.

அவள் மட்டும்தாளு வசீகரத்தை விரும்புகிருள்? தோட்டத்தில் தினம் தினம் பூத்துக்குலுங்கும் மலர்கள். மணமற்ற அந்த மலர்களுக்குள்ளே எத்தனே விதவிதமான வண்ணங்கள்! கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணங்கள்! அதன் வனப்பையும் வண்ணத்தையும் கண்டுதானே தேன் உண்ணும் வண்டுகள் அதை நாடுகின்றன.

தன்னே நாடுவார் யாருமில்லே என்று உணரும் அவள் — அவள் உடலின் கருமையை மறைக்க—ஏன் அழகு கெட்ட முகத்துக்குப் பவுடர் பூசுகிருள். கருங்கூந்தலுக்கு விதவிதமாக மலர்களைச் சூடி காண்போரை வசீகரிக்கிருள். இது அவள் பலவீனம். அவள் போக்கு அப்படி அப்படி ஒரு விதமாக மலரை சூடிகொண்டு வரவில்லே என்ருல் அறுமுகம் அவளைப் பார்த்திருக்க மாட்டார். அப்படிப் பார்த்திருந்தாலும் அவளைப்பற்றிப் பெரியதாக எடுத்துக்கொண்டிருக்க மாட்டார்.

இறைவன் மனமுள்ள மலர்கள் மத்தியில் வாசமறற மலர்களைப் படைத்திருப்பதுபோல் அழகான மனிதர்களையும் படைத்து அகோர உருவங்களையும் படைத்திருப்பது தான் வேடிக்கை. இறைவனுக்கு வேண்டுமானுல் அது வேடிக்கையாக இருக்கலாம்....ஆனுல் படைப்புக்குரிய அவர்களுக்கு அது வேதனையாகவல்லவா இருக்கிறது!

காலேயிலும் மத்திய வேளையிலும் தன்னை அலங்கரித்துக் கொண்டு புறப்படும் நேரத்தையும், எடுத்துக்கொள்ளும அழகுசாதனங்களின் அளவும் எண்ணி அவள் படும் வேதனை அவளுக்கல்லவா தெரியும்!

"சார் அட்டன்டன்ஸ் கொஞ்சம் கொடுக்குறிங்களா?" அவள்தான்—அம்புஜம் என்னைக் கேட்டாள்; தலைமையாசிரியன் என்றமுறையில், "ஏன் டேபிள்மேல் இல்லே" என்று கேட்டுக்கொண்டே நானும் தேடினேன். ஏதோ ஒரு புத்தகத்தினடியில் இருப்பதைக் கண்டு நானே எடுத்து அவளிடம் கொடுத்தேன்.

அவள் கையெழுத்துப் போட்டுவிட்டு தலைநிமிர்ந்தாள். "என்ன சார்; என்றைக்கும் இல்லாமல் இன்றைக்கு அப்படிப்பார்க்கிறிங்கோ..."

"ஒன்றுமில்லே......நீங்க தப்பாக எடுத்துக்கலேன்னு நான் சொல்றேன்" என்று சொல்லிக்கொண்டே சுற்றுப்புறத்தை பார்த்தேன். சக ஆசிரியர்கள் யாராவது இருக்கிருர்களா? என்று. அப்படி யாராவது பக்கமிருந்து கேட்டுவிட்டால் அவளுக்கும் அவமானம். எனக்கும் அபகீர்த்தி இல்லேயா?

"இல்லே சொல்லுங்கோ"

"ஒரு மாதத்துக்கு எத்தனே பவுடர் டின் செலவாகிறது?"

"ஏன் சார்" அவள் குழைந்து தயங்கினுள்.

"குறைந்தது ஒரு பத்து டின்னுவது செலவாகுமா? எதுக்குக் கேட்கிறேன்னு பவுடரை அப்பு அப்புன்னு அப்பிக்கிட்டு வர்றிங்களே அதுக்காகக் கேட்டேன்..."

அவன் நான் ஒரு தலேமை ஆசிரியன் என்பதற்காகப் புன்முறுவலோடு தலேகுனிந்தாள்.

இன்னும் அவள் மீது காழ்ப்புத் தீரவில்லே எனக்கு; திரும்பவும் கேட்டேன்,

"ஆமாம் அந்தப் பூவு என்னப் பூ?" என்றேன்.

"எந்தப் பூவு?" என்று கேட்டுக் கொண்டே தலேயின் பின்புறம் கை வைத்தாள்.

"பூவு தலேயில் இல்லே; காதோரமிருக்கிற பூவைக் கேட்டேன்" என்றேன்.

"நீங்கள் ரொம்பக் குறும்புக்காரர் சார்" என்று சொல்லிக்கொண்டே அவள் வகுப்பறையை நோக்கி நடந்தாள்.

அவளையும் அவள் நடையையும் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருந்தேன்.

"பெண்களே ஒரு நளினம். அந்த நளினம் அவள் நடையிலேயும் அலங்காரத்திலேயும் இருக்கிறது தவறென்ன?

"அலங்காரம் இருக்க வேண்டியதுதான்; ஆனுல் அது; அவள் நடையிலேயும் மாற்ருரை வசீகரிப்பதற்காகவும் இருக்கக் கூடாது. அந்த அலங்காரம் நற்பண்பிலேயும் தூய எளிய ஆடையிலேயும் இருந்தால்போதும். அப்படிப்பட்ட அலங்காரம்தான் ஒரு ஆசிரியைக்கு வேண்டும் "என்றெல்லாம் எண்ணிற்று—அறிவு மனம்!

அன்று அவள் "நோட்ஸ் ஆப்ஃ லசன்" எழுதிக் கொண்டு வந்து காட்டினுள். அவளும் நானும்தான் தனிமையில் இருந்தோம். வேறு யாரும் இல்லே என்பதை என் கண்களை ஒரு கணம் சுற்றவிட்டுத்தெரிந்துகொண்டேன். அன்று மிக மிக எளிமையாகவும் பவுடர் அவ்வளவாக அப்பாமலும் வந்திருந்த அவள் என்னைப் பெரிதும் கவர்ந்தாள்.

"அம்புஜம்..."

"சார்..."

"அன்று உங்கள் மனம் நோக ஏதேதோ பேசிவிட்டேன் மன்னிக்கவும்" என்றேன்.

"ஆ...ஆ...அப்படி எல்லாம் நீங்கள் சொல்லக் கூடாது சார். நீங்கள் கண்டிப்பதற்கு உரிமை இருக்கிறது; கண்டிக்கலாம்; தவறில்லை; நானும் தவருக எடுத்துக் கொள்ளவில்லை"—என்ருர்.

"அப்படியா?" நான் அவளைப் பார்த்தேன்.

அவள் தலை கவிழ்ந்தாள். தரையில் காலின் பெரு விரலினுல் எதை எதையோ வரைந்து கொண்டிருந்தாள்.

அவள் தருகின்ற உரிமை; எந்த உரிமை? தலைமை ஆசிரியர் என்ற உத்தியோக முறையிலா? இல்லை—பெண்கள் உள்ளத்தில் ஏற்றுக் கொண்டு மனப்பூர்வமாக தருகின்ற தியாக உரிமையா? அப்படியானுல் இவளுக்கு இன்னும் மணமாகவில்லையோ...என்று எண்ணிக் கொண்டு தலை நிமிர்ந்து, நெஞ்சில் ஏதோ ஒரு இனமறியாத் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பார்த்தேன். அவள் கழுத்திலே அந்தப் புனித மஞ்சள் சரடு இல்லை. இக்காலப் பெண்கள்தான் அதை மறைத்துக் கொள்ளுகிருர்களே—அதற்குரிய "மகத்துவம்" தெரியாமல் என்று எண்ணிக் கொண்டு அவள் கால்களைப் "பார்த்தேன்...அவள் கால்களில் "மெட்டி இல்லை.

"சார் உங்களிடம் நிரம்ப பேச வேண்டும் என்று ஆசை; இன்று மாலை தவருமல் தில்லிக் கேட்டுக்கு வாங்கோ" என்று சொல்லிக் கொண்டு நோட்டுப் புத்தகத்தையும் எடுத்துக் கொள்ளாமல் என் பதிலுக்கும் காத்திராமல் வெளியேறினுள்—அம்புஜம்.

என் சிந்தனை இறக்கைக்கட்டிக் கொண்டு வானத்தில் பறந்தது.

இவளுக்கோ இன்னும் மணமாகவில்லை. எனக்கோ அடுத்த ஜூன் திங்கள் 15-ல் மண முடிக்க வேண்டும் என்று என் தந்தையின்திட்டம்.

மனைவியாக வருகின்றவளே என் தாய் மாமன் மகள். அதிகம் படிக்காதவள்.

ஒரு ஆசிரியனுக்கு ஒரு ஆசிரியையைத்தான் மணம் முடிக்கவேண்டும் என்பது இக்கால வாலிபர்களின் நாகரிகம். கணவன் எந்ததுறையைச் சார்ந்தவனே; அந்தத் துறையைச் சார்ந்தவளை மணப்பதுதான் வாழ்க்கையின் இன்பம் என்று கருதுகிருர்கள். நிறம்தான் கருப்பே ஒழிய உள்ளம் என்னவோ பாலுள்ளம்—குழந்தை உள்ளம். குழந்தைகளோடு பழகிப்'பழகி அவளும் ஒரு குழந்தையாகவே இருக்கிருள் 'கரவற்ற நெஞ்சம். மணநாள் நிச்சயிக்கப்பட்டு விட்டதே......வரப்போகிற மனைவியும் தூரத்து உறவல்ல நெருங்கி" உறவு; என் தாய் மாமன் மகள். அவளும் அவர் குடிக்கு ஒரே மகள். நானும் என் தந்தைக்கு ஒரே மகன். எப்படி மாற்றி அமைக்க முடியும். என்னையும் அவள் விரும்புகிருள். நானும் அவளை விரும்பினேன். என் விருப்பத்தைக் கேட்டுத்தானே முடிவு செய்தார்கள்?

எந்த பாலாற்றங்கரையில் நானும் அவளும் — அவள் என்ருல்; என் வருங்கால மனைவி—ராஜம்—; மண் வீடு கட்டி விளையாடிய பருவம் முதல் ஆகாயக் கோட்டைக்கட்டிக் கொண்டு பேசு பேசு என்று பேசிக் கொண்டு வந்த இந்த நாள்வரை; ஆடியும்ஓடியும உட்கார்ந்தும்பேசிக் கொண்டும் இருந்தோமோ அதே பாலாற்றங்கரையில் — தில்லிக்கேட்டில்—நேற்றுவந்தவள் சந்திப்போம்; தனிமையில் நம்மைப்பற்றி பேசி முடிவெடுப்போம் வா என்று அழைக்கிருளே......

"என்ன சார் மணியாயிற்று; இன்னும் உட்கார்ந்துக் கொண்டிருக்கிறீர்களே..." சக ஆசிரியர் ஆறுமுகம் என் சிந்தனைப் பறவையின் இறக்கையை வெட்டினுர்.

"நேரம் போனதே தெரியவில்லை சார்..." என்று என் சிந்தனைக்கு திரையிட்டுக்கொண்டு சிறகொடிந்த பறவையாக எழுந்து, எங்கெங்கு எவை எவைகளை வைக்க, வேண்டுமோ......அவைகளை அங்கங்கு வைத்துப் பூட்ட வேண்டியவைகளைப் பூட்டி சாவிக் கொத்தை கையிலே பிடித்துக் கொண்டு அவரோடு நடந்தேன்.

கைகால்களை அலம்பி உடை மாற்றிக்கொண்டு தில்லிக்கேட்டை நோக்கி நடந்தேன். எனக்காக அம்புஜம் காத்துக் கொண்டிருந்தாள்.

ஆசிரியரிடம் பாடம் கேட்க உட்காரும் மாணவன்போல் அவள் முன்னே போய் உட்கார்ந்தேன். அவள் என்னைப் பார்த்துப் புன்னகைப் பூத்தாள். நானும்பதிலுக்குப் புன்னகை பூத்தேன். அவள் பேச முயன்ருள்.

"சார்; உங்களைப் பற்றி என் பெண் உள்ளம் எதை எதையோ எண்ணிக்கொண்டிருக்கிறது, அந்த நினைப்பு வீண்போகக் கூடாது, என்பதுதான் என் கோரிக்கை..."

"அது பெண்களுக்கே உள்ள கோரிக்கை" என்று எண்ணிக் கொண்டு "ஊங்" கூட்டினேன்—நான்.

"சார் பீடிகை எதுக்கு; நேரடியாகவே சொல்லுகிறேன்; "நீங்கள் என்னைக் கடிந்து கொண்டதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். ஒரு கணவன் ஒரு மனைவியைக் கடிந்து கொள்வதில்லையா? அந்த வகையில் தான் நான் அதை எடுத்துக் கொள்ளுகிறேன்; எடுத்துக் கொண்டேன். என் நினைப்புப்படி என்னை நீங்கள் நேற்று கடிந்து கொள்ளுவதற்குமுன் என்னைப்பற்றித் தெரிந்துக் கொள்ளவேண்டும். ஒரு பெண் — அதுவும் ஒரு ஆசிரியை இப்படி எல்லாம் பேசலாமா-? பேசுவாள் என்று எண்ணுதீர்கள். மற்றப் பெண்கள், ஆசிரியைகள் பேசுவார்களோ பேசமாட்டார்களோ-நான் பேசுகிறேன். அப்படி நான் பேசுவதுகூட எனக்கு ஒரு பலவீனம் தான்! பெண்ணே பலவீனமுடையவள் தான்!! ஆண்கள் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவதே இதற்கோர் எடுத்துக் காட்டு!

சார், என் தாய் ஒரு முகமதிய பெண்; என் தந்தை ஒரு இந்து. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்குப் போராடிய ஒரு வெறியர் என் பாட்

(15-ம் பக்கம் பார்க்க)



## வேடதாரி!

"...தமிழ் நாட்டில் இருக்கும்போது காமராசர் மிகவும் தீவிரமான சோஷலிஸ்டுபோல் காட்டிக்கொள்கிருர். டெல்லியிலோ, காங்கிரசில் உள்ள பிற்போக்கு வாதிகளுடன் கூட்டுச் சேருகிருர்.

—சீதாராம்கேசரி.
(பீகார் மாநிலக் காங்கிரசுத் தலைவர். நாடாளுமன்ற உறுப்பினர்.)



# தேவருலகத்தில் மூவர்!



மறைந்த காந்தியடிகளும், நேருபிரானும், அறிஞர் அண்ணாவும், இன்றையச் சூழ்நிலையில் சந்தித்துக்கொண்டால், அவர்கள் பேச்சு இப்படியும் இருக்கக்கூடுமில்லையா?......

[மகாத்மா காந்தி கண்ணில் நீர்சோர, கையிலிருக்கும் பகவத்கீதையை ஒருபுறம் வைத்துவிட்டு, ஒரு கையால வழியும் நீரை துடைத்து விட்டுக்கொள்கிறார். வழிக்க வழிக்க நீர் குபுகுபுவென பொங்கிக்கொண்டே வருகிறது கண்களிலிருந்து. சற்று தூரத்திலிருந்து இதனைக் கவனித்துக்கொண்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் வெள்ளிச் சிமிழிலிருந்து, ஒருசிட்டிகை பொடியை எடுத்து உறிஞ்சிவிட்டு, மேல் துண்டினால் துடைத்து விட்டுக்கொண்டு காந்தியாரை நோக்கி வருகிறார் வந்துகொண்டே, ...]

**அண்ணா:-** மகாத்மா, மறுபடியும் பூலோகம் செல்லவேண்டும்! அப்போதுதான் அண்ணலே, இந்த அழுகை நிற்கும்! சோகம் குறையும் ஆத்திரம் அடங்கும்!

**காந்தி:-** அடங்காது அண்ணா அடங்காது. உங்கள் தம்பிமார்களைப் போல் நானும் உம்மை அண்ணா வென்றே அழைக்க அனுமதியுங்கள். அண்ணா நான் இப்போது பூலோகம் சென்றாலும் இன்னுமொரு கோட்சேக்காத்துக்கொண்டிருப்பான்! தப்பி வந்ததேபோதும்! அந்த கோட்சேக்காக நான் இராமபிரானிடம் மன்றாடிக் கொண்டிருக்கிறேன், அவனையும் என் அருகிலேயே அனுப்பிவைக்கும்படி. நன்றிக்குரியவன் கோட்சே!

**அண்ணா:-** பாபுஜி! இன்னமும் கண்ணீர் வழிந்து கொண்டிருக்கிறது...

**காந்தி:-** அது இனி என்றுமே நிற்காதி அண்ணா! என்றுமே நிற்காது!

**அண்ணா:-** காரணத்தை நான் அறிந்துகொள்ளலாமா?

**காந்தி:-** காரணம்! எதனைச் சொல்வேன், எதனை விடுவேன். நன்றி மறந்துவிட்ட நயவஞ்சகர்கள் செய்கின்ற ஒவ்வொன்றுமே காரணமாகி இருக்கிறதே! உங்களுக்கு அந்த கருத்திருமனைத் தெரியுமா?

**அண்ணா:-** என்ன அப்படிக்கேட்டுவிட்டீர்கள் பாபுஜி... கோவைக் கம்பர் என்று புகழாரம் சூட்டப்பட்ட அந்தகொங்குநாட்டரை நான் அறியமாட்டேனா? பாராளுமன்றத்திலே நான் இருக்கும்போதே பழக்கமாயிற்றே! அதனை விட்டு, தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதலமைச்சராய் அமர்ந்தபோதிலேயே, இந்நாட்டு மக்கள் அவரையும் என் எதிரிலேயே அமர்த்திவிட்டார்களே! நன்றாக அறிவேன் அண்ணலே! நல்ல மனிதர். சூடான சுவையான பேச்சாளர்!

திருவாரூர். முத்துராமன்

**காந்தி:-** பேச்சாளர் என்றுதானே சொன்னீர்கள். நல்லவேளை! பேச்சினை ஆளத்தெரியாதவர்கள் எல்லாம் கூட உங்களால் பேச்சாளர் என்று புகழப்படுவதைக் கேட்டிருக்கிறேன்! இன்று காண்கிறேன்! அண்ணா, இந்த பண்புதான் உங்களை உயர்த்தியது! வாழவேண்டும் உங்கள் பண்பாடு.

**அண்ணா:-** கருத்திருமனைப்பற்றி...

**காந்தி:-** காங்கிரஸ்காரர் என்று ஏற்றுக்கொள்ளக்கூட மனம் ஒப்பவில்லை. என்ன பேசி இருக்கிறார் தெரியுமா? இந்தாருங்கள், இந்த ஏட்டினைப் புரட்டுங்கள்...

[அறிஞர் அண்ணா அதனை வாங்கிப் படித்துவிட்டு]

**அண்ணா:-** என்னைப்பற்றிப் புகழ்ந்து பேசி இருக்கிறார்!

**காந்தி:-** என்ன! என்ன, புகழ்ந்து பேசி இருக்கிறாரா?

**அண்ணா:-** ஆமாம் அண்ணலே! நான பூலோகத்தில் வாழ்ந்த வரைக்கும் இது போன்ற புண்மொழிகள்தான் என்னைப் பெரிதும் வளர்த்தன; வாழ்வித்தன. இழிமொழிகளால் நான் அர்ச்சிக்கப்படாத நாள் மிகவும் குறைவு. எதிர்ப்பிலே ஏற்றம் கண்டவன் நான். நான் இதுபோன்ற இழிமொழிகளையும், பழிச் சொற்களையும் புகழாரங்களாகவே சூடிக்கொண்டேன்! இப்போதும் சூடிக்கொள்கிறேன்!

**காந்தி:-** மிஸ்டர் அண்ணாதுரை!......மன்னிக்கணும் சாரி, அண்ணா, நீங்கள் எவ்வளவு பெரிய மனிதர் என்பதை நான் இப்போது முழுமையாக உணர்கிறேன். என்னோடு இணைத்து உங்களை, தென்னாட்டுக் காந்தி என்று அழைக்கலாமா என்று கேட்டிருக்கிறாரே, அந்த

எதிர்க் கட்சித் தலைவர், உங்களுக்கு நான் ஒப்பாகமாட்டேன் என்ற வகையில் அது உண்மைதானே! அதனால்தான் நீங்கள் அதனை வரவேற்கிறீர்களா?

அண்ணா:- தவறு அண்ணாவேலதவறு தவறியும் நான் அப்படிக் கருத மாட்டேன்! உங்களைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள், உங்களைப் புறக்கணிப்பதுபோல், என்னைப் புரிந்துகொள்ளாதவர்களும் இருக்கக்கூடும் இல்லையா?

காந்தி:- கருத்திருமனை விடுங்கள். அதோ பாருங்கள், யாரென்று பாருங்கள்! புரிகிறதா உங்களுக்கு?

அண்ணா:- எல்லைக் காந்தி! கான் அப்துல் கபார்கான் என்று நினைக்கிறேன்!

[என்கிறபோது நேரு வந்து கொண்டிருக்கிறார். அவர் கரங்களில் ஒற்றை ரோஜா மலர் ஒன்று மந்தகாசமாக மலர்ந்து இதழ் விரித்துக்கொண்டிருக்கிறது. நேரு அதனை முகர்ந்து கொண்டே]

நேரு:- பாபுஜி! நம் எல்லைப் பெரியார், இப்போது இந்தியாவின் தலைநகரத்துக்கு வந்திருக்கிறாராம்! 22 ஆண்டுகளுக்குப் பிறகு வந்திருக்கிறார்! 15 ஆண்டுகள் பாகிஸ்தானின் சிறையில் சித்ரவதைகளை அனுபவித்துவிட்டு வந்திருக்கிறார்! நீங்கள் அங்கே இல்லாத குறையை, ஈடு செய்து கொண்டிருக்கிறார் பாபுஜி!

[அண்ணா சிரித்துவிட்டு]

அண்ணா:- உண்ணா நோன்பின் மூலம், உலுத்துப் போன இதயங்களுக்கு நல்லுதிரம் செலுத்த முயன்றதை நினைவுபடுத்துகிறீர்களா நேரு அவர்களே!

நேரு:- இல்லை, இல்லை! அண்ணா அவர்கள் அப்படி யெல்லாம் நினைக்கக் கூடாது!

காந்தி:- பைட்டோ பாபு!

அண்ணா:- தமிழிலேயே பேசுங்களேன், எனக்கும் புரியும்!

நேரு:- அடாடா! பார்லிமெண்டில் தான் தமிழ், தமிழ்! தமிழ்! என்று பேசினீர்கள் என்றால் இங்கு கூடவா...

அண்ணா:- பரமன் உருவாக்கியது தான் எங்கள் பைந்தமிழ் என்பார்கள், என் நாட்டில்! பரமண்டலத்திலும் அது பரவவேண்டியது தானே!

காந்தி:- நன்றாகச் சொன்னீர்கள் அண்ணா! நான் கூட இந்துஸ்தானியைத்தான் பரப்பக் கூறினேன், இந்த நேரு...

நேரு:- (குறுக்கிட்டு) நான் என்ன செய்ய முடியும்! என்னை என்ன செய்யவிட்டார்கள் சகபாடிகள்!

காந்தி:- நாடாளுதற்கு நாற்காலியமர்ந்தும், நல்லது செய்யவிட்டில்லை உங்களை என்கிறீர்களா? உங்களுக்கே அந்த கதியென்றால், உங்கள் குமாரத்திக்கு மட்டும்...

நேரு:- கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். பாவம் இந்திரா!

காந்தி:- அதனைக் குறிப்பிடுவதற்காகத்தான், அந்த கபார்கான், மூன்று நாட்கள் உண்ணாவிரதமிருந்தார் என்று ஒப்புக் கொள்கிறீர்களா?

அண்ணா: அப்படி இருக்க முடியாது அடிகளே! மொத்தத்தில் நாட்டிலே ஒரு அமைதிச் சூழ்நிலை கெட்டுவிட்டிருக்கிறது! எல்லைக் காந்தியின் ஒரு எடுத்துக்காட்டைக் கவனித்தீர்களா? "பாகிஸ்தானின் அயூபைப்போல" என்று பேசியிருக்கிறாரே, கவனித்தீர்களா?

காந்தி: அதைப் படித்த பிறகுதானே என் கண்ணீர் பெருக்கு மிகுந்தது நிற்க மறுக்கிறது!

நேரு:- பாபுஜி! 'அயூபைப்போல' என்று பொருள் கொள்வதானால், எனது இந்திராவையல்லவா, குறைகாண நேரும் நீங்கள் ஒப்புகிறீர்களா பாபுஜி!

அண்ணா:- அண்ணாவுக்கு இது போன்ற வினாக்கள் மூலம் ஒரு நெருக்கடியை உண்டாக்கி விடக் கூடாது. ஏற்கனவே மனம் நொந்திருக்கிறார். நேரு அவர்களே! தங்கள் புதல்வியை மட்டும் இப்போது குறை காண முடியாது. ஆட்சிப் பொறுப்பிலிருப்போரும், கட்சிப் பொறுப்பிலிருப்போரும்கூட, இன்று கட்டறுந்த நிலையிலேயே தறி கெட்டுச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எல்லைப் பெரியார் போன்றவர்கள்கூட, தன் இறுதிக் காலத்தை இந்தியத் துணைக் கண்டத்தில் அமைதியுடன் கழிக்க முடியாது என்று வெளிப்படையாகவே கூறும் அளவுக்கு அங்கே நிலைமைகள் வளர்த்து விடப்பட்டிருக்கின்றன! வளர்ந்து விட்ட அந்த நிலைக்குச் சரியான உவமைதான் 'அயூபைப் போல்' என்பது!

காந்தி:- 'அயூபைப் போல' என்று கூறிவிட்டு, சூழ்ச்சிக்காரரான அந்தக் காமராசரையும் நினைத்துக் கொள்ளுங்கள் சோட்டாஜி!

நேரு:- காமராசர் பாவம்! எப்படியாவது தன் பெயர் நாள்தோறும் ஏடுகளில் வந்துகொண்டிருக்க வேண்டும் என்ற அற்ப ஆசை! தங்களைப்போல் புகழப்பட வேண்டும் என்ற வெறித்தனம்! காலா காந்தி என்றுகூட அழைக்க வேண்டும் என்று சில காதுகளுக்குக் கட்டளையிட்டவர்! அவருக்குத் தெரிந்த—புரிந்த அரசியல் அது! அப்படித்தான் இருக்கும்!

காந்தி:- அதனால்தான் விருந்துக் களைத்த வீரருக்கு பட்டினி கிடந்தார் என்ற விருதளித்திருக்கிறார்கள் உங்கள் வாரிசுகள்!

நேரு:- மன்னியுங்கள் பாபு! நிஜலிங்கப்பாவையும், அவரது நடவடிக்கையையும் கவனித்தீர்களா?

அண்ணா:- ஏன், பாட்டிலையும், மொரார்ஜியையும் தனிமைப் படுத்துகிறீர்கள்?

காந்தி:- எல்லோருமாகச் சேர்ந்து தான் "அயூப்பைப் போல்" என்றாக்கி வைத்திருக்கிறார்கள்! மக்களை மதிக்க மறுக்கிறார்கள்! சுயநலத்தின் உச்சிக்கே வந்து விட்டிருக்கிறார்கள்!

நேரு:- அப்புறம் அயூபுக்கு ஏற்பட்ட கதிதானே பாபு...

காந்தி:- அது காமராசருக்கு ஏற்படும்! உங்கள் குமாரிக்கு ஏற்படாது! பயப்படாதீர்கள்! ஆனால் ஒன்று, இந்த அண்ணாதுரை, இல்லை இல்லை எனக்கும் அண்ணாவாகிவிட்ட இவர் தந்த மாமந்திரம், கடமை கண்ணியம், கட்டுப்பாடு என்பதை நாடெங்கும் பரவவிடவேண்டும்! தலைவர்களுக்கும் கற்றுத்தரவேண்டும்! மக்களுக்கும் புரியவைக்கவேண்டும்! ஞாலம் விரைந்து ஏற்றாக வேண்டும்! இல்லையென்றால், என்பெயரை உச்சரிப்பதையே விட்டொழிக்கவேண்டும்! என் நிழலில் ஒளிந்துகொண்டு இழிவுகளைச் செய்வதைவிட, என்னைக் கொன்றுபோட்ட கோட்சே, நல்லவன்! நம்பிக்கைக்குரியவன்!

அண்ணா:- நீங்கள் மிகுந்த கோபத்திலிருக்கிறீர்கள்! கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டால் நல்லது!

காந்தி;- அண்ணா! நீங்கள் வளர்த்த

அரசியல் தமிழகத்தில் கிளைத்துத் தழைத்துக் கொண்டிருக்கக் காண்கிறேன். உங்கள் வாரிசுகள் உங்கள் புகழில் பெருமையடைவதை உணருகிறேன்! அண்ணு காங்கிரஸ் அப்படி இருக்கிறதா? அந்த வழியில் யாராவது அதனை இயக்குகிருர்களா?

அண்ணு:- அதுதான் தமிழ்ப் பண்பாடு அடிகளே! தமிழ்ப் பண்பாடு!

நேரு:- மறைமுகமாக இந்தித் திணிப்பை எதிர்க்கிறீர்கள்!

அண்:- இல்லை! இந்தியத் துணைக் கண்டத்து சிறுபான்மை மொழியினரை—மதிக்கக் கற்று தாருங்கள்! இந்த பண்பாடு தானுக உங்களுக்கும், உங்களைச் சார்ந்தோருக்கும் வரும்! மனம் மகிழும்! அமைதி தானுக ஏற்படும்! ஒற்றுமை உருவாகும்!

காந்தி, நேரு:- உண்மை! உண்மை! அடிப்படையை உணர்ந்தோம்! வாழ்க அண்ணு! வாழ்க அண்ணு!

[என்று இருவரும் பேரறிஞர் அண்ணுவை ஆரத்தழுவிக் கொள்கின்றனர். காந்தியடிகள் கண்ணீர்ப் பெருக்கும் நிற்கிறது.]

★

12-ம் பக்கத் தொடர்ச்சி

டனுர். மகாத்மா காந்திதான் என் பாட்டனுருக்குக் கடவுள். காந்திய பக்தர் அவர். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக இப்படி அல்லும் பகலும் உழைக்கிருயே உன் ஒரே மகளை—ஒரு இந்துவுக்கு மணம் முடித்து தருவாயா? என்று யாரோ ஒருவர் என் பாட்டனுரை நோக்கிக் கேட்டாராம், அப்படி தருவதினுல் இந்த வெறித்தனம் நின்று விடுமா? என்ருராம். முதலில் செய்; பிறகு கேள் என்ருராம். என் தாயை மணக்க யாரும் முன் வரவில்லை, என் பாட்டனுரின் ஏமாற்றத்தை உணர்ந்த அவர் சிரித்தாராம். யாரும் முன்வரவில்லை; நீயே என் மகளை மணந்துகொள்ள என்ன சொல்லுகிருய்? என்று அவரையே கேட்டாராம். அவர் சம்மதம் என்ருராம். அவருக்கும் என் தாயுக்கும் மண முடிக்கப்பட்டது. அப்பொழுதும் இந்து முஸ்லிம் போராட்டம் நின்றபாடில்லை. என் தந்தையின் ஆவேசம் கட்டுக் கடங்கவில்லை. அவரே போராட்டத்தில் குதித்தார். அந்தப் போராட்டத்தில் என் தந்தை மரணமடைந்தார். அப்போது எனக்கு மூன்று வயது. என் தந்தையின் ஏக்கத்தால் என் தாயும் அவரைப் பின்தொடர்ந்தாள். நான் அனுதையானேன். யாரோ ஒரு பெரியவர் என்னை கிருத்துவமத ஆசிரமத்தில் சேர்த்தார். படித்தேன்; வளர்ந்தேன்; பெரியவளானேன்; இன்று ஆசிரியை...என்னை மணக்க யாரும் முன்வரவில்லை. என்னை விரும்பாதவர்கள் என் கவர்ச்சியையும் என் நவநாகரிகத்தையுமாவது விரும்பி என்னை ஏற்றுகொள்ளுவார்களா? என்றுதான் நான் எண்ணிக்கொண்டு ஆடை அலங்காரங்களுடன் பவனி வருகிறேன். என்னை ஏறெடுத்துப் பார்ப்பாரில்லை..." அவள் கண்களை நீர்த்திவலைகள் வந்து மறைத்தன.

"நாட்டுக்குழைத்த நல்லவர்களின் வாரிசுகளுக்கு இப்படி ஒரு ஆபத்தா? என்று எண்ணிக் கொள்ளுவதைத்தவிர வேறு என்ன என்னுல் செய்துவிட முடியும்?

நானும் அந்தத் தியாகச் செம்மல்களுக்கு இரண்டொரு கண்ணீர் சொட்டுக்களை சிந்திவிட்டு எழுந்தேன். அவளும் எழுந்தாள். ஆனுல அவள் என்னைப் பின்தொடரவில்லை. அவள் வேறு திசையிலும் நான் வேறு திசையிலும் நடந்தோம். அவள் ஒரு ஒட்டு மாம்பழம்.

காயாக இருக்கும் மாங்காய்—கனியானப் பிறகு இனிக்கிறது! ஆனுல் மனிதர்கள்—மனித சமுகத் தறகு—அவனிக்கு என்று இனிபபார்களோ......தெரியவில்லை!! அந்தோ உலகே உன் செயல் மாருதோ!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

கப் போகிறவர்கள் இவர்கள் தானு 'ஜனகணமன' பாடி இந்திய ஒற்றுமைக்கு வலிவு தேடுபவர்கள்; இப்படிச்சின்னக குழநதைகள் மாதிரி சண்டை போட்டுக் கொள்கிருர்களே"

என்றுதானே எளிய பாமர மக்கள் நினைப்பார்கள்.

பாமர மக்களின் இத்தகைய கேள்விகளையும் அவர்களின நிலையையும் பாரதத்தின் சுகதுக்கங்களையும நிர்ணயிக்க வந்தவர்கள் எண்ணிப் பார்த்து நடப்பார்களா? அப்படி அவர்கள் நடக்காவிட்டால் என்ன நடக்கும என்பதனைத்தான் அவர்களே ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக கொண்டு சொல்லிவருகிருர்களே. "புரட்சி நடக்கும்"

—புலவர் மலையமான்

## காமராசர் அரசியல்— 'மெயில்' படப்பிடிப்பு

"'அரசியல் என்பது அழுக்கு நிறைந்த விளையாட்டு; அதிலும், இந்தியாவில் நாணயமற்ற அரசியல் வாதிகளே பெரும்பாலும் இந்த விளையாட்டில் ஈடுபடுகிருர்கள்.

"முதிர்ச்சி யடையாதவர்கள்—வரலாறு கற்பிக்கும் பாடத்தை உணர மறுக்கிறவர்கள் – தங்களுடைய கசப்பான அனுபவங்களின் பயனை உணர மறுக்கிறவர்கள்—ஆகியோர், துரதிருஷ்டவசமாக அரசியல் விளையாட்டில் ஈடுபடுகிருர்கள்.

"குறிப்பாகச் சிலர், 'காங்கிரசு என்ன நன்மைகள் செய்யப் போகிறது' என்பதை விளக்கிக் கூருமலேயே 'காங்கிரசுதான் நாட்டுக்கு நல்லது செய்ய முடியும்' என்று நம்புகிருர்கள்; அல்லது, 'காங்கிரசுக் கட்சியின் பிடிப்பில்தான் நாடாளு மன்ற சனநாயகம் வாழும்' என்று கருதுகிருர்கள்.

"ஆனுல், நாடாளு மன்ற சனநாயகத்தின் வெற்றக்கு, 'இரு சட்சி முறை அவசியம' எனறு நாம அறிவோம்! எல்லா நேரங்களிலும ஒரே கட்சியே ஆட்சியிலிருபபது என்பது, கம்யூனிஸ்டு அல்லது பாசிஸ்டு வகையைச் சேர்ந்தது.

"இங்கிலாந்தில் உள்ள தொழிற் கட்சியானது, 'எதிர்க் கட்சயாக இருக்கும கன்சர்வேடிவ் கட்சியால் எந்த நன்மையும் செய்ய முடியாது' என்று கூறுவதில்லை; அதேபோல் கன்சர்வேடிவ் கட்சியும், தொழிற் கட்சியைப் ப்ற்றிக் கூறுவதுல்லை.

"அமெரிக்கான்ல் அரசாங்கத்தை நடத்தும் பொறுப்பை சனநாயகக கட்சியிடம் மக்கள் ஒப்படைத்தால், 'சனநாயகக் கட்சி எந்த நன்மையும செய்ய முடியாது' என்று அங்குள்ள குடியரசுக் கட்சி சவால்விட முனைவதில்லை!

"திறமையும் அரசாங்கமும் காங்கரசுக்கே ஏகபோகம்—என்று கொண்டாடப்படுவதை இந்தியாவில்தான் நாம் அடிக்கடி கேட்க வேணடியுள்ளது."

—மெயில் தலையங்கத்தில் ஒரு பகுதி

சாதிக் கொடுமை
புரையோடுகிறது!

மேடும் பள்ளமும்
மனித வாழ்வை

சமுதாயக் கேடு
சதிராடுகிறது!

உயர்வும் தாழ்வுமாக
மாற்றுகிறது!



எப்படி?

## அமரர் அண்ணா

அவர்களின்

# "கலிங்கராணி"

தொடர் கதையில்!

மாற்று என்ன?

## 2-11-69 முதல் "காஞ்சி"யில் படியுங்கள்!

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-2
60, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.